முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 26-4-57 | வெள்ளி | ஒலி 1

அய்யகோ, தமிழா; உனக்காக அல்ல!

பண்டித நேரு புத்தர் விழாவில் கலந்து கொள்ள இலங்கை செல்லுகிறார்.

Best copy avail

வறுமைத் தேள் கொட்டுகிறது; வாக்கெடுப்புக்கு இயந்திரமா?

" **தா**ய்மார்களே; உங்கள் வளையல்களை யெல்லாம் கழற்றிக் கொடுங்கள்; நாடு வளம்பெற அவை யெல்லாம் தேவையாக இருக்கின்றன."

—ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலர். முன்பு ஒரு முறை பெண்கள் சமுதாயத்திடம் பரிதாபமான முறையிலே இந்த வேண்டுகோளை நீட்டினார்!

"மாதர்களே! உங்கள் தாலியிலே இருக்கும் தங்கத்தை எடுத்துத் தாருங்கள்!"

—மிக உருக்கமான முறையிலே; உள்ளத்தைத் தொடும் விதத்திலே இரக்கம் சிறிதுமின்றி பொது மேடையிலே பேசினார் நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்!

இவர்கள் மட்டும்தானா?

"பெண்களே! உங்களுக்குப் போன் ஆபரணங்கள் தேவையில்லை. அவைகளையெல்லாம் எடுத்துக் கொடுங்கள்! நாட்டு முன்னேற்றத்தில் பங்கு பெறுங்கள்!"

—இந்த உபகண்டத்தின் முதல்வர் பண்டித நேருவே கோரிக்கை விடுத்தார்; இது வேடிக்கை என்று கருதியவர்களைப் பார்த்து வெகுண்டார்; பெண்கள் தங்க ஆபரணங்களைத் தருவது நாட்டு முன்னேற்றத்துக்கு உதவி புரிவது என்பதைப் பற்றி பன்னிப் பன்னிப் பேசினார்!

ஏன்?

பெண்களின் ஆபரணங்களிலும்; நகை நட்டுகளிலும் கை வைக்கின்ற அளவுக்கு இந்த நாட்டு அரசாங்கத்திற்கு என்ன நேர்ந்து விட்டது?

பெரும்பாலான பெண்டிர் விலை உயர்ந்த உலோகமாம் தங்க மென்னும் கிடைத்தற்கரிய பொருளை தாலிச் சரட்டிலே—அதுவும் நூற்றுக்குத் தொண்ணூற்றி ஒன்பது பேர் முலாம் பூசி அணிந்து கொண்டிருக்கின்றனர்!

பிரஜைகளின் உயிர்களையும் பொருள்களையும் பிடுங்கிக் கொள்ளும் இந்த அரசாங்கம் 'பெறற்கரிய பாக்கியம்' என்று இந்தியப் பெண்கள் கருதுகின்ற மாங்கல்யத்திலே வேயப்பட்டிருக்கும் பொன்னோட்டையும் ஏன் பிடுங்க முயல வேண்டும்?

சோஷலிச பாணி என்னும் பெயரை வைத்துக் கொண்டு பண முதலைகளை யெல்லாம் வேட்டையாடி; கோடி கோடியாய்ப் பொருள் குவிக்க அனுமதித்து விட்டு; ஏழை மக்கள் மீது அநியாயமான வரிச்சுமைகளை ஏற்றி; ஏற்கனவேயே ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்ட எத்தர்களின் சாகசத்தால் வளைந்துபோயிருக்கும் அவர்கள் முதுகினை ஒடித்துவிட எத்தனிக்கும் இந்த நேரத்தில் அவர்கள் வீட்டுப் பெண்களின் சாதாரண ஆசையை—ஆபரணம் பூண வேண்டும் என்கிற பெண்மையின் இயற்கை அவாவினை—ஏன் தடுக்க நினைக்கிறார்கள், இந்த ஆட்சியாளர்கள்?

—ஆனால் இதுபோன்ற தாறுமாறான பேச்சுகளுக்கும்; குயுக்தித் திட்டங்களுக்கும் அவர்களுக்குச் சரியான காரணமொன்று கிடைத்திருக்கிறது!

"என்ன செய்வது; ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது! அதை அமுல் நடத்தாவிடில் இந்த உபகண்டம் பின்னேற்றப் படுகுழியில் விழுந்து விடுமே!"

—கதைக்கிறார்கள், கனம்கள்!

ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுல் நடத்தப்பட வேண்டியதுதான்; ஆனால் அதற்காக வரிவிதிப்பிலும்; ஆடம்பரப் பொருள் இறக்குமதியைத் தவிர்ப்பதிலும் காட்டிய ஆர்வத்தை; கட்டுப்பாட்டை இதர துறையிலே காட்டியிருக்கிறார்களா, இந்த ஆட்சியாளர்கள்?

சில அநாவசியமான பொருள்களை இறக்குமதி செய்வதன் மூலம் இந்திய உபகண்டத்தின் நாணயம் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு ஏதுவாகிறது. அதனால் அவை தடுக்கப்பட்டன; ஒப்புக்கொண்டோம்!

ஆடம்பரப் பொருள்களும் இதே கதிதான்!

சில தனவான்களும், பணமலையின் சிகரத்திலமர்ந்து வாழ்க்கையை ஒரு கலையாகக் கருதிரசித்துக்கொண்டிருக்கும் பெருந்தனக்காரர்களும் தங்களது பணக்காரத் தன்மையை உலகுக்குப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி வெறும் டாம்பீகத்தைக் குறிக்கும் பகட்டுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டிருந்தார்கள் முன்பு!

தேவையே இல்லாமல் புது 'மாடல்' கார்கள் கம்பெனிக்காரர்களால் விளம்பரப்படுத்தப்பட்டதும்; மாடலுக்கு ஒவ்வொன்றுவிதம் அவர்கள் வீட்டு முகப்பிலே அணிவகுத்து நிற்கும்! அந்த முதலாளிமார்களுக்குக்கூட குழப்பம் உதயமாகிவிடும்; 'செவர்லே'யில் ஏறிச் சவாரி செய்வதா? 'பியூக்'கில் பிரயாணம் செய்வதா? அல்லது 'காடில்லாக்'கில் சென்று காற்று வாங்குவதா—என்று!

—இப்போதும் இந்தத் தன்மையிலே ஏதும் மாற்றம் இல்லாவிட்டாலும்; வெளி நாட்டிலே தயாராகும் கார்களை முன்னைப் போல அவ்வளவு சுலபமாக அவர்கள் வாங்க முடியாது!

ஏனெனில் வெளி நாட்டிலே உற்பத்தியாகும் இந்த ஆடம்பர வாகனங்களை இறக்குமதி செய்வது தடுக்கப்பட்டுவிட்டது இப்போது!

இந்த ஆடம்பரப் பொருள்களை வாங்குவதற்கு செலவிடப்படும் வெளி நாட்டுச் செலாவணியை வேறு அவசியப் பொருள்களை — ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெற உதவும் முக்கிய இயந்திரங்களை வாங்குவதற்குப் பயன்படுத்தலாமே என்னும் பெரு நோக்கத்தில் அவைகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கிறது!

அது மட்டுமா? இன்னும் தெளிவான உதாரணமொன்று சொல்ல வேண்டுமானால் வெளி நாட்டுக் காகிதங்களை—குறிப்பாக அச்சுத் தாளை முன்னைப் போல யாரும் நினைத்தபடி இறக்குமதி செய்ய முடியாத அளவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது!

ஏன்?

வெளிநாட்டிற்கு அவசியமில்லாமல் இந்திய நாணயம் செல்லக் கூடாது என்பதற்காக மட்டுமல்ல; இந்தியாவிலேயே மத்தியப் பிரதேசத்திலே உள்ள நேப்பா மில்லில் அச்சுத்தாள் உற்பத்தி செய்யும் ஆலையொன்று நிறுவப்பட்டு; இயங்கி வருகிறது.

அந்த அச்சுத்தாளின் தரம் வெளிநாட்டு அச்சுத்தாளோடு ஒப்பிட முடியாத அளவுக்கு மோசமாக இருந்தாலும் கூட; உள் நாட்டிலே உற்பத்தியாகும் அந்தச் சரக்கு அதிக அளவுக்கு விற்பனையாக வேண்டும்; அதற்கு இந்தியாவிலேயே ஒரு நல்ல 'மார்க்கெட்' வேண்டும் என்கிற காரணத்திறகாக வெளிநாட்டுக் காகிதத்தை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாட்டினை விதித்தார்கள்!

—வரவேற்றது, மக்கள் சமுதாயம்!

—இப்படி என்னென்னவோ செய்து இந்திய நாணயம் தேவையற்ற முறையிலே வெளிநாடு செல்வதைக் கட்டுப்படுத்தினார்கள்!

ஆனால் அதே நேரத்திலே இப்போது யாரும் வரவேற்காத காரியம் ஒன்றையும் செய்திருக்கிறார்கள்!

ஊருக்கெல்லாம் சொல்லுமாம் பல்லி; கழனிப் பானையில் விழுமாம் துள்ளி — என்கிற விதத்தில் ஊருக்கெல்லாம் உபதேசித்துவிட்டு; ஆடம்பரப் பொருள்களை வெளி நாட்டிலிருந்து தருவிக்காதே என்று உத்தரவை நீட்டிவிட்டு; இப்போது தங்களது ஆடம்பரத்திற்காக வேண்டி வெளிநாட்டிற்கு லட்சம் லட்சமாகக் கொட்டியழுதிருக்கிறார்கள்!

ஆமாம்; டெல்லி பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் ஓட்டளிப்பதற்காக இயந்திர சாதனங்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து எட்டு லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள்!

இனிமேல் மக்கள் சபை உறுப்பினர்கள் பிரேரபணையின் பேரில் வாக்களிப்பதற்கு உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு எழுந்திருக்க வேண்டிய அவசியமில்லை!

ஒவ்வொரு உறுப்பினருக்கு எதிரிலேயும் மூன்று பொத்

❋ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தி. மு. க. சட்டசபைக் கட்சிக் கூட்டம்

"28—4—57 காலை 10-மணிக்கு, சென்னையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் இல்லத்தில் ('அஞ்சுகம்' எண் 7—ஏ., தெற்குக் கோபாலபுரம் 4-வது தெரு, சென்னை-6) தி. மு. க. சட்டசபைக் கட்சிக் கூட்டம் நடைபெறும்"

என்று, தி. மு. க. சட்டசபைக் கட்சிச் செயலாளர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அறிவிக்கிறார்.

வெள்ளி 26—4—57 சென்னை

மூன்று கோடுகள்!

தென்னகத்திலே தேவையான தொழிற்சாலைகள் கிடையாது.

ஒரு பிராந்தியத்தின் முன்னேற்றம் ஆலைச் சக்கரத்தின் சுழற்சியிலேதான் இருக்கிறது—என்கிற விதத்திலே இருபதாம் நூற்றாண்டின் பொருளாதாரம் அமைந்துவிட்ட இந்தச் சூழ்நிலையிலேதான் தென்புலம் வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கும் வேதனைக் காட்சியைப் பார்த்து ரசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம், நாம்!

போதுமான ஆலைகள்தான் இல்லையெனினும்; விவசாயத் துறையிலாவது இந்திய உபகண்டத்தின் இந்தப் பகுதிக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றனவா?—என்று கேட்டாலும் ... பதில் கூறியே ஆயாசப்பட்டுக் கொள்ள வேண்டிய ... சுயநலத்... நாம் வைக்கப்பட்டிருக்கிறோம்!

வடநாட்டிலே அமைந்திருக்கும் நீர்ப்பாசன திட்டங்களோடு; அணைக்கட்டுகளோடு; ஒற்றுமைப் படுத்திப் பார்க்கும் அளவில்கூட இங்கு எதுவும் இல்லை!

அங்கே கடைசித் தர திட்டங்களாகக் கருதப்படுபவைகள்கூட தென்னகத்தின் முதல் தரத் திட்டங்களைவிட முதலீட்டில்—பாசன அமைப்பில்—பெரிதாகத்தான் இருக்கின்றன என்பதை தேசியத் தோழர்களும், அவர்கள் ஏடுகளும்கூட மறுக்கவில்லை!

வரி கொடுக்கிறோம்; திட்டங்களுக்காக வசூலிக்கப்படும் கடன்களுக்கு நிதியளிக்கிறோம்—ஆனால் அதன் பிரதிபலனே நம்மைத் திருப்தி செய்யும் அளவிற்குக்கூட வடநாட்டு ஆட்சியாளர்களால் திருப்பித் தரப்படுவதில்லை!

தங்கம் விளையும் நாடுதான்; ஆனால் தரித்திரம் குடியேறியிருக்கிறது!

தொழிற் புரட்சியைத் தூண்டிவிடும் கருப்புத் தங்கமாம் நிலக்கரிக்குப் பஞ்சமில்லை, இந்தப் பூமியில்; ஆனால் அதைத் தோண்டி எடுப்பதற்கோ பல ஆண்டுகள் காலத்தைத் தள்ளிப்போட்டு வருகின்றனர் ஆட்சியாளர்கள்!

இரும்பும்; உருக்கும்தான் ஒரு நாட்டின் பொருளாதார வளத்தைச் செப்பனிட்டு; வாழ்வில் உயர்ச்சிதரும் பொருள்கள்!

இரும்பையும் உருக்கையும் அதிக அளவில் உற்பத்தி செய்வதின் மூலம்தான் மேலை நாடுகள் இன்று மேம்பட்ட வாழ்வினை நடத்தி வருகின்றன!

அந்த இரும்பு—உருக்குத் தொழிற்சாலைகள்தான் இதுவரை மூன்று அமைக்கப்பட்டிருக்கின்றன, இந்த உபகண்டத்தில்!

அவைகளில் ஒன்றாவது விந்தியத்திற்கு இப்பால் அமைக்கப்படவில்லை. ஏன்—என்று கேட்டு; ஏக பாரதக் கைவிலங்கிடப்பட்டு; ஏமாந்த சோணகிரியாய் இருக்கும் தென்னகத்திற்கு மூன்று உருக்குத் தொழிற்சாலைகள் அல்ல; நெற்றியில் *மூன்று கோடுகள்தான்* கிடைத்திருக்கின்றன!

இப்போது நான்காவதாக இன்னொரு உருக்குத் தொழிற்சாலையையும் அமைக்கப் போகிறார்கள்; எங்கே?

அதுவும் வடநாட்டிலேதான்!

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த போகாரோவில் அதை நிர்மாணிப்பதென்று இந்திய அரசு முடிவு செய்திருக்கிறதாம்!

கனிப் பொருள்களுக்குக் குறைவில்லை; தென்னகத்தில் ஆனால் இந்தப் பகுதியிலே ஒரு இரும்பு—உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கோ மனமில்லை, இந்திய அரசுக்கு!

இந்த வேதனையையும்; வேண்டுமென்றே தென்புலத்தின்பால் டெல்லி மூலவர்கள் காட்டும் வஞ்சகத்தையும் தாங்கமாட்டாத தென்னிந்திய இரும்பு வியாபாரிகள் சங்கத்தவர்கள் மத்திய ஆட்சியின் போக்கால் நைந்துபோன தாங்கள் மனத்தினைச் சங்கத்தின் 14-வது ஆண்டு விழாவிலே வெளிக்காட்டியிருக்கிறார்கள்!

அந்த விழாவிலே சங்கத்தின் தலைவர் இரும்பு—உருக்குத் தொழிற்சாலை ஒன்றினை இங்கு அமைக்கும்படி விடுத்திருக்கும் வேண்டுகோள் இரும்பு மனம் கொண்ட வடநாட்டுத் திமிங்கிலங்களையும் உலுக்குகின்ற பான்மையிலே அமைந்திருக்கிறது:

"......ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இரும்பு—உருக்கின் அளவினைக் கொண்டுதான் அந்த நாட்டின் தொழில் வளர்ச்சி மதிப்பிடப்படும்.

"இந்த உயர்ந்த உலோகத்தை உற்பத்தி செய்வதை **1956**-ல் தான் நாம் துவங்கியிருக்கிறோம் என்றும் சொல்லப்படுகிறது. அதிகக் கனிப்பொருளைக் கொண்டுள்ள தென்னகத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதுதான் நமது பெரு விருப்பமாகும். மேலும் ஒரு உருக்குத் தொழிற்சாலையை இங்கு ஏன் துவங்கக்கூடாது என்பதற்கும் நியாயம் எதுவும் கிடையாது.

"...இரும்பு உருக்குப் பொருள்களை தென்னிந்தியா மிகுதியாகப் பயன்படுத்தி வருகின்றது. அவைகளை வட நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதின் மூலம் பெரும் தொகையைப் போக்குவரத்துக் கட்டணமாகச் செலுத்த வேண்டியிருக்கிறது."

—இரும்பு உருக்குப் பொருள்களை அதிகமாகத் தருவித்து உபயோகிக்கிறது தென்னகம்; இருந்தும் அதில் ஒரு தொழிற்சாலை இல்லை.

...இதற்கு என்ன பொருள்?

"அல்லாவின் ... அவைகள் இரும்பு உருக்குப் பெ... தான் நீ, ருசியா! தெரி... ஆண்களின் ஆற்ற... கோனிப்... ஒரு ... நம்ப வைத்துவிட்... நான் இம்மாதிரி மாற்று... ...ர்க்களம் புறப்பட்டி... ...க்கும் தெரியக் ...ன் படிவு 'மார்க்கெட்' வேண்டாம் ... தென்னகம்!

—இந்த நோக்கத்திலேதான் வடநாட்டு ... திட்டத்தை வகுத்துக் கொண்டு செயற்படுத்தி வருகிறது ... தவிர இதற்கு வேறு என்ன பொருள் இருக்க முடியும்?

இந்தியாவிலிருந்து மூலப் பொருள்கள் இங்கிலாந்திற்குச் செல்லும்; மான்செஸ்டர்; கிளாஸ்கோ போன்ற இடங்களிலே மூலப் பொருள்கள் வியாபாரப் பொருள்களாக மாறும்; திரும்பி வரும்; இங்கு விற்பனையாகும்—இது வெள்ளையன் ஏகாதிபத்திய வெறியனாய் அரசு கட்டில் ஏறியிருந்தபோது!

இப்போதும் அதே முறைதான்! தென்னகம் மூலப் பொருள் உற்பத்தியாக்கவும்; வடநாட்டிலே உற்பத்தியான வியாபாரப் பொருள்களின் விற்பனைக்குத் தேவையான மார்க்கெட்டாகவும்தான் பயன்படுத்தப்படுகிறது!

வெள்ளையன் ஏகாதிபத்தியத்திலாவது இவ்வளவு கொடுமை இல்லை; இந்த வடநாட்டுக் கொள்ளையர் ஏகாதிபத்தியமோ உலகில் வேறெங்கும் காணமுடியாத விதத்திலே நண்பனைப்போல் நடித்து; இங்குள்ளவர்களையே விபீஷணர்களாக மாற்றிக்கொண்டு; விபரீதபுரியிலே தென்னகத்தைத் தள்ளிவிட்டு; நம்மைத் தலைதூக்க விடாமல் செய்யும் எண்ணத்துடன் செயலாற்றி வருகிறது!

நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தொகுதியில் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் சென்னை யூனியன் மோட்டார்ஸ் கம்பெனி டி. டி. கே. யுக்கு ஓட்டளிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டு 'சுதேச மித்திரனில்' வெளியிட்ட விளம்பரத்திலே குறிப்பிட்டிருந்தது:

"தென்னாட்டைப் பொன்னாடாக்குவதற்குச் சாத்தியமான சகல முயற்சிகளையும் செய்து வருபவர் ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரி."

—தென்னாட்டைப் பொன்னாடாக்குவதற்கு முயற்சி செய்பவராம் அவர்!

அவர் பதவியிலிருக்கும் இந்த நேரத்திலேதான் நான்காவது இரும்பு—உருக்குத் தொழிற்சாலையும் இங்கு இல்லை என்கிற வேதனைச் செய்தி வெளியாகியிருக்கிறது!

கிருஷ்ணமாச்சாரியார் தென்னாட்டைப் பொன்னாடாக்க வேண்டாம்; அதைப் பழுதி மேடாகவாவது ஆக்காமலிருக்கக்கூடாதா? ஃ

ஒடுக்க முடியாதது ★ ★ தேசிய எழுச்சி!

எந்த சக்தியும் எந்தக் காலத்திலும் அடக்கி ஒடுக்க முடியாத சக்தி ஒன்று இருக்கிறதென்றால் அது தேசிய இன எழுச்சிதான்! தற்காலிகமாக அது ஒடுக்கப்பட்டாலும்—அது இன்றில்லா விடில் நாளை—நாளை மறுநாள் போர்க் கொடி உயர்த்திப் புறப்பட்டே தீரும்!—இது வரலாறு காட்டும் படிப்பினையாகும்! இந்தப் பின்னணியோடு ஹங்கேரியின் இன எழுச்சிப் போர்க் காதையைப் படியுங்கள்!

ஹெய்ன்ஸ் கெய்ல் என்ற மேற்கு ஜெர்மனி வியாபாரி, அங்கேரிப் புரட்சி ஆரம்பிப்பதற்கு முதல் நாளன்று, புடாபெஸ்ட் நகரத்திலிருந்து தப்பி ஓடி வந்து விட்டார். அவருக்குக் கல்லூரி மாணவர்களுடன் பேச வாய்ப்பு கிடைத்ததாம்; அங்கேரி மாணவர்கள் அவரிடம் அநேக கேள்விகள் கேட்டார்களாம். ஏனென்றால், இதர உலகப் பகுதிகளுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லாமையும், அன்றைய முன்னேற்றங்களிலிருந்து அவர்கள் துண்டிக்கப் பட்டிருப்பதுமே காரணமாகும். ஜெர்மனியில் உள்ள கூலி விகிதம் என்ன? ஒரு தொழிலாளி என்னென்ன வாங்க முடியும்? ஒரு ஜோடி செருப்பின் விலை என்ன?—என்பன போன்ற கேள்விகளைக் கேட்டனராம்.

சில வாரங்களுக்கு முன்னரே அங்கேரியில் சீக்கிரமே புரட்சி மூளும் என்று அந்த வியாபாரியின் நண்பர்கள் அவரிடம் கூறினராம். ஆனால், புரட்சி எப்போது மூளும் எப்படி மூளும்; என்பது அவர்களுக்குத் தெரியாது. விரைவில் புரட்சி ஏற்பட இருக்கிறது என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியுமாம். அங்கேரியர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் கம்யூனிஸ்டு அதிகாரிகளின் வாழ்க்கைத் தரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தனர். அந்த அதிகாரிகளுக்கு பொருள்கள் வாங்க தனிக் கடைகளும், பண வசதியும் இருந்தது. ஆகவே, கலவர நிலைமை வளருவதை, ஒவ்வொருவனும் கண்டான்.

ஒரு ஆஸ்திரிய அதிகாரி பின்வருமாறு கூறினார்: "அங்கேரியர்கள், ஆஸ்திரியா சுதந்திரமாக இருப்பதையும், அங்கு நல்ல நிலைமை இருப்பதையும் கண்டனர். சுதந்திர உலகத்தைப்பற்றி அவர்கள் அறிந்த வரையில், தங்கள் நாட்டோடு ஒப்பிட்டுப் பார்த்தனர். தங்கள் நாட்டு சிறு தொழில் திட்டங்களினால் ஏற்பட்டுள்ள உற்பத்திக் குறைவும், விஞ்ஞான, கலாச்சார தொடர்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருப்பதும் அவர்களுக்குத் தெரியவந்தது!"

இந்தப் புரட்சியில் ரஷ்யத் துருப்புகளின் நுழைவு முக்கியமானது. அங்கேரியின் தானிய வயல்களிலே டாங்குகளை ஓட்ட முடிந்ததே தவிர, அங்கேரி மக்களின் இதயத்திலே இடம்பெற முடியவில்லை ரஷ்யர்களால். அதே சமயத்தில், அல்ஜீரிய சுதந்திரப் போராட்டம் பற்றியும், மேற்கத்திய ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராடும் எகிப்து பற்றியும் கம்யூனிஸ்டுகள் செய்த பிரச்சாரத்தில் அங்கேரி இளைஞர்கள் மூழ்கிஇருந்தனர். ஆனால் அவர்களே சுதந்திரமாக இல்லை என்பதை உணரவில்லை.

தலைவர்களே இல்லாமல் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் மக்கள் எழுச்சியால் ஏற்பட்ட அங்கேரிப் புரட்சி நவீனகால வரலாற்றில் ஒரு இணையற்ற நிகழ்ச்சியாகும். புரட்சியின் உச்சக் கட்டத்தில், சோவியத் டாங்குகளைத் தாக்க இளைஞர்கள் தங்கள் கையில் ஆயுதமின்றி, ஆனால் ஆவேசத்துடன் ஓடினர்; ஆயுதங்களைக் கைப்பற்றினர்; அவற்றைச் செம்படைக்கெதிராகவே பயன் படுத்தினர். புரட்சியை நிறுத்தும்படி உத்தரவ[illegible]மல் உத்தரவு பறந்த[illegible]ல்லாவற்றுக்கும் கீழ்[illegible] மறுத்தனர். அம்ம[illegible] அச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டவர்களாகவே காணப்படவில்லை. பதினைந்து வயதுப் பையனொருவன் தன் கையில் எவ்வித ஆயுதமுமின்றி ஒரு ராணுவ அதிகாரியிடம் சென்று, "உங்களைவிட எங்களுக்கே இது மிகவும் தேவைப்படுகிறது," என்று சொல்லிக் கொண்டே அவரது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கம்பீரமாக நடந்து சென்றான்.

ரஷ்ய டாங்கி ஒன்றை இளைஞர் கூட்டம் ஒன்று வளைத்துக் கொண்டது. கனல் கக்கும் யந்திரத் துப்பாக்கியையும் சட்டை செய்யாமல் ஒரு இளைஞன் டாங்கியின்மேல் தாவிக் குதித்தான்; தன் ரிவால்வாரால் டாங்கி டிரைவரை சுட்டு வீழ்த்தினான். மற்றவர்கள் பெட்ரோலை ஊற்றி அந்த டாங்கியைக் கொளுத்தி விட்டனர். உள்ளே இருந்த ரஷ்யர்கள் வெளியேற ஆரம்பித்தனர். அந்த டாங்கி அதிகாரி ஒருவரின் துப்பாக்கியைப்பிடுங்கிக் கொண்டு, ஒரு புடாபெஸ்ட் நகரத்துப் பையன் ரஷ்யர்களை நோக்கிச் சுட்டான். "பால் மணம் மாறாப் பச்சிளம் பிஞ்சுகள் ரஷ்ய டாங்கிகளோடு போராடுகிறார்களே!" என்று ஒரு புடாபெஸ்ட் நகரத்துத் தாய் கதறினாள். அவள் பின்வரும் பல சம்பவங்களைக் கூறினாள்:

❋ கொளுத்தப்பட்ட மூன்று ரஷ்ய டாங்கிகளுக்கிடையே ஒரு பெண்ணின் பிணம் கிடந்தது. அந்தப் பெண்ணும், அவளது சகாக்களும் அந்த டாங்கிகள்மீது எரியும் பெட்ரோல் சீசாக்களை வீசினர். அப்போது அவளை ரஷ்யர்கள் சுட்டுக் கொன்றார்கள். அவள் மீது யாரோ அங்கேரிக் கொடியைப் போர்த்தி பின்வரும் குறிப்பையும் இணைத்திருந்தனர்: "இங்கே இறந்து கிடப்பவள் பதினேழு வயதுடைய அங்கேரிப் பெண்: இவள் சாவு வீண் போகவில்லை":

❋ பதின்மூன்று வயதுடைய பையன் ஒருவன் ஒரு வீதியின் குறுக்கே போடப்பட்டிருந்த தற்காலிகத் தடுப்பு வேலிக்குப் பக்கத்தில் தன் கையில் ரைபிளுடன் நின்று கொண்டிருந்தான். "அருமை மகனே! ரைபிளை உபயோகிக்க யாரிடமப்பா கற்றுக் கொண்டாய்?

"என்னையும், என் போன்ற குழந்தைகளையும் சுடுவதற்குக் கற்றுத் தந்தார்களே கம்யூனிஸ்டுக் கட்சியினர்; அவர்களிடமிருந்தே நான் கற்றுக் கொண்டேன்"-இப்படி அந்தப் பையன் மற்றவர்களைப் போலவே தனக்குக் கிடைத்த வாய்ப்பை கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் திருப்பினான்.

❋ எண்ணற்ற தெருப் போராட்டங்களால், முகமெல்லாம் கோடுகளும், கீரல்களும் அடைந்த ஒருவன் பின்வரும் சம்பவத்தைக் கூறினான்: "நான் வசிக்கும் பகுதி இங்கிருந்து நூறு கெஜ தூரம் இருக்கும். அங்குள்ள ஒரு தெருவினுள் நுழைய நாலு நாட்கள் ரஷியர்கள் படதபாடு பட்டனர்; ஆனாலும் முடியவில்லை. பதினான்கு, பதினைந்து வயதுக் குழந்தைகள் அவர்களை நுழைய விடாமல் தடுத்துவிட்டனர். அந்தக் குழந்தைகள், வீடுகளின் நாலாவது மாடியிலிருந்து கொண்டு பெட்ரோல் சீசாக்களையும், கைக் குண்டுகளையும் ரஷ்ய சிப்பாய்கள் மேல்வீசி அவர்களைக் கொளுத்தியே விட்டார்கள். இப்போதும் நீங்கள் அங்கே போனால் கருகிப்போன சிப்பாய்களின் பிணங்களைப் பார்க்கலாம்!"

❋ ரைபிளைக் கொண்டு சுட்டதால், அதன்பின் தாக்குதல் காரணமாக ஒரு சிறுமியின் தோள்கள் கன்றிப் போயிருந்தன. அவள், மற்றவர்களும் ரஷ்யர்களைச் சுடலாம்; ஓட ஓட விரட்டலாம் என்று எடுத்துக் காட்டுவதுபோல் இளைஞர்கள் விளங்கினர்-என்று கூறினாள்.

நிராயுதபாணிகளாக ரஷ்யப் படைகளை எதிர்த்துப் போராடிய இந்த ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் யார்?

"பயங்கர வாதிகள்" என்றன மாஸ்கோ ஏடுகள்.

"கலகக்காரர்கள்" என்றது அங்கேரி கம்யூனிஸ்டு சர்க்கார்.

"சுதந்திரத்துக்காகப் போராடுபவர்கள்" என்றனர் தலைவர்கள்.

அங்கேரிப் புரட்சிக்கு இப்படியெல்லாம் 'லேபிள்கள்' கொடுக்கப்படுவதைக் கண்ட ஒரு அங்கேரியன் சிரித்துக் கொண்டே பின்வருமாறு கூறினான்; அவன் கால் குண்டு பட்டுப் [illegible]ந்திருந்தது. "அங்கேரிக்காகப் போராடும், அங்கேரியர்களே நாங்கள்," என்றான் அவன்.

புரட்சி ஆரம்பித்த வரலாறு கீழ்வருமாறு என்று ஒரு மாணவர் மூலம் தெரிய வந்தது: "தனி மனித உரிமை பற்றிய பதினான்கு அம்ச திட்டம் ஒன்றை புடாபெஸ்ட் ஒலிபரப்பு நிலையத்தில் படிக்க இரவு 7-30-க்கு மாணவர்கள் சென்றனர்; அனுமதி கேட்பதற்காக எங்களில் ஐந்துபேர் உள்ளே சென்றனர். இதற்கிடையே, பாதுகாப்புப் போலீஸ் படையினர் வெளியே இருந்த கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

"இந்தத் துப்பாக்கிப்பிரயோகம் நடக்க ஐந்து நிமிடங்கட்கு முன்புதான் ரஷ்ய—அங்கேரி நட்புக் கொள்கையை புடாபெஸ்ட் ஒலிபரப்பு நிலையம் அறிவித்தது. குழந்தைகள் லாரிகளில் ஏறிக்கொண்டு புடாபெஸ்ட் நகர வீதிகள் தோறும் "பாதுகாப்புப் போலீஸ் படையினர் நிராயுதபாணிகளான பல்கலைக் கழக மாணவர்களை சுட்டுக்கொன்று விட்டனர்," என்று கத்திக் கொண்டே சென்றனர். ஆயிரக் கணக்கான மக்கள் புடாபெஸ்ட் ஒலிபரப்பு நிலையத்தைச் சூழ்ந்து கொண்டு தாக்கமுற்பட்டனர்; இந்த நேரத்தில்தான் புரட்சி ஆரம்பமாகியது."

திடீர் சம்பவம் ஒன்று அங்கேரி சர்க்காருக்கு எதி

❋ தொடர்ச்சி 9-ம் பக்கம்

15

டெல்லியிலிருந்து வந்த உத்திரவுப்படி, அல்தூனியா விசாரணைக் கைதியாக அரசி ருசியாவை டெல்லிக்கு அனுப்பவில்லை; திருமண அழைப்பையே டெல்லிக்குப் பதிலாக அனுப்பினான்!

அரசி ருசியாவிற்கும் அல்தூனியாவிற்கும் திருமணம்! சிறைபிடிக்கப்பட்டவள் சிறைபிடித்தவனையே சிறைபிடித்து விட்டாள்! அல்தூனியா—ருசியா திருமணம் பிதுந்தாவில் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. டெல்லி சுல்தான் பெய்ராம்—ருசியாவின் திருமணத்திற்கு வராதது மட்டுமல்ல; கட்டளை நிறைவேற்றப் படாததால் கடுங்கோபம் கொண்டு—அல்தூனியாவையும், ருசியாவையும் இராஜத் துரோகிகள் என்று பிரகடனப் படுத்தினான். பெய்ராமின் படைத் தளபதியாகிய யாகூத்—ஒரு சமயம் அல்தூனியாவின் அத்யந்த நண்பனாயிருந்து தோளோடு தோள் நின்று போரிட்டவன்—இப்பொழுது பகிரங்க விரோதியானான். அவனுடைய காதலி பமீயா இருக்கும் நாடு விரோதி நாடாகிவிட்டதால், காதலியை மீட்கும் சுயநலக் காரியத்திற்காகவாவது பிதுந்தா நாட்டோடு போரிட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது, யாகூத்திற்கு!

திருமண விருந்து முடிந்த உடனேயே அல்தூனியா படைவரிசைகளைப் பார்வையிடப் போனான். டெல்லி போர் முரசுக் கொட்டியது! இன்பக் கேளிக்கைகளில் திளைத்து மகிழ வேண்டிய இளங் காதலர்கள், ஒன்றாக அமர்ந்து போருக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தனர்.

பமீயா—அவள் இருதலைக் கொள்ளி எறும்பானாள்! அரசி ருசியா இப்பொழுது பமீயாவைத் தோழியாகக் கருதவில்லை; சந்தேகக் கண்களுடனேயே அவளைப் பார்த்தாள். காதலன் யாகூத்திற்காக, எதிரிகளின் சார்பில் ஒற்றர் வேலை செய்து விடுவாளோ என்று பயந்தாள். பமீயாவின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஆட்களை நியமித்தாள்.

பமீயா—பாவம்—அரண்மனைச் சூதாட்டங்களில்—அரசியல் தாயத்தில்—காயாக உருட்டப் பட்டாள்! கள்ளமற்ற உள்ளம் படைத்த அச்சிறுமி—காதல் என்னும் குற்றம்புரிந்து காவலர்களின் சுகபோக வாழ்க்கையில் குறுக்கிட்டு விட்ட காரணத்தால், துயரமே அவள் வாழ்க்கைப் பாதையாக அமைந்தது. அந்த ஏழைப் பெண்ணின் தியாகம் விழலுக்கிறைத்த நீராயிற்று; புடம் போடப்பட்ட அவளது இராஜ விசுவாசம் சந்தேகத்திற்கு இலக்கானது!

கண்ணீரைக் காலத்திற்கு அர்ப்பணித்தாள், காதலைக் கடமைக்கு அர்ப்பணித்ததைப் போல!

..., டெல்லிப் படைகளால் முற்றுகையிடப்பட்டுவிட்டது. டெல்லிப் படைகளின் பலமோ எண்ணிக்கையிலும் தரத்திலும் அல்தூனியா—ருசியாவின் கூட்டணியை விடச் சிறந்து விளங்கியது.

முற்றுகை நீடித்தது. முற்றுகையை உடைத்தெறியக் களத்தில் இறங்கிப் போரிட அல்தூனியாவும் ருசியாவும் முதலில் பயந்தார்கள்! காரணம், செம்மையுறப் பயிற்சி பெற்றது டெல்லிப் படை என்பதும், திறம் படைத்த தளபதி யாகூத் அதன் தளகர்த்தன் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

"ருசியா," என்று அழைத்தான் அல்தூனியா! கலவரமும் ஏக்கமும் அந்தச் சொல்லிலே இழைந்து ஒளித்தன!

"ஹுசூர்! களம் கண்ட போது கலங்குவது நமது பரம்பரைக்கே இழுக்கு. முற்றுகை நீடிக்குமானால், பட்டினியால் அவதியுறும் மக்கள் பயங்கரமான விரோதிகளாகிவிடுவார்கள். பசியால் வாடும் மக்களிடம் நாட்டுணர்ச்சி செத்துப் போய் காட்டிக் கொடுக்கும் கயவர்களாக அவர்கள் மாறி விட்டால்கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். ஆகவே கோட்டைக் கதவுகளைத் திறந்து விடுங்கள்—முற்றுகை அழியட்டும்; விரோதிகளைக் களத்திலே சந்திப்போம்; கடைசிப் போர் வீரன் உள்ள வரை போர் நடக்கட்டும்; டெல்லிக்குப் பணிந்தார்கள் ருசியாவும் அவள் கணவன் அல்தூனியாவும் என்ற அவச் சொல் மட்டும் வேண்டவே வேண்டாம்!"—பேரரசி ருசியா, கணவனுக்கு ஆலோசனை கூறவில்லை—கட்டளையே இட்டாள்.

"அல்லாவின் அபூர்வ சிருஷ்டிதான் நீ, ருசியா! தெரியாமலா, நூறு ஆண்களின் வீரமும், விவேகமும், ஆற்றலும் என் மகளுக்கு உண்டு என்று உன் தந்தை பெருமைப் பட்டிருக்கிறார்," என்று கூறி, ஆசையோடு அவள் உதடுகளில் முத்தமிட்டான் அல்தூனியா! "ருசி, களத்தில் போரிட்டு இறப்பதை நான் வீரன் என்ற முறையில் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்...ஆனால், பெறற்கரிய பேரரசியை மனைவியாகப் பெற்றும், அவளின் துணை கொண்டு நாடாளும் நல்ல வாய்ப்பை அல்லா அருளவில்லையே என்று வருந்துகிறேன்... அழகும் ஆற்றலும் அடைக்கலம் புகுந்திருக்கும் இந்தப் பொற்சிலை எனக்குப் பிறகு..."—அல்தூனியா பேசவில்லை; நாக் குழறினான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது.

"இதென்ன ஹுசூர், மனக் கலக்கம்! படைத் தலைமையை நீங்கள் மட்டும் ஏற்கவிட மாட்டேன்! ருசியா, அல்தூனியாவின் அந்தப்புர ராணி மட்டுமல்ல; போர் ருசியாவிற்கு ஒரு பொழுதுபோக்கு!...என்ன சிந்திக்கிறீர்கள்?"

"ருசி, உன் பெருமையை டெல்லியில் உள்ள ஓம்ராக்கள் உணராமல் போனது விந்தையே; அறிவுப் பெட்டகத்தை கை நழுவ விட்டுவிட்டு அதை அழிக்கவும் புறப்பட்டு வந்திருக்கும் அவர்களுடைய அறிவே அறிவு...ருசியா, மரணத்தின் தலை வாயிலில் நிற்கும் நேரத்திலாவது, உன் அறிவையும் திறனையும் பயன்படுத்தும். வாய்ப்பை யளித்த அல்லாவை மனதார வாழ்த்துகிறேன்!"

அல்தூனியா மேற்கு திசை நோக்கி மண்டியிட்டான். ருசியாவும் அவனோடு பிரார்த்தனையில் ஈடுபட்டாள்.

மறுநாள் காலை; கோட்டைக் கதவுகள் திறக்கப்படு முன், மசூதிகளெங்கும் விசேஷப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. அரசி ருசியா வெற்றிக்காக நோன்பிருப்பதாக மக்கள் பேசிக் கொண்டனர்.

திடீரென்று அந்தப்புரத்திற்குள் அனுமதியின்றி ஒரு ஆண் பிள்ளை நுழைவதைக் கண்ட பமீயா திடுக்கிட்டு எழுந்து போக முயன்றாள். அந்த ஆண்மகனோ சற்று துடுக்குத்தனமாகவே அவள் கையைப் பற்றினான்.

"பமீ!"

பமீயா ஆச்சர்யத்தில் மூழ்கினாள். கையைப் பற்றியது வேறு யாருமல்ல; ஆணுடையில் இருந்த அரசிதான்!

"பீகம், ஆண்பிள்ளை மாதிரியே இருக்கிறீர்களே! அடையாளமே தெரியவில்லையே! ஏன் பீகம், இந்த வேஷம்?"

"பமீயா, நன்றாகக் கவனி! நான் நோன்பிருப்பதாக மக்களை நம்ப வைத்துவிட்டேன். நான் இம்மாதிரி மாறுவேடயில் போர்க்களம் புறப்பட்டிருப்பது யாருக்கும் தெரியக் கூடாது! சண்டையின் முடிவு தெரியும்வரையில் என்னுடைய அரசி உடைகளை நீ அணிந்து கொண்டு, யாரையும் பார்க்காமல் நோன்பிருப்பதாக நடிக்க வேண்டும்...பமீ, இரண்டாம் முறையாக எனக்காக நீ அரசியாகிறாய்...இனி, எப்பொழுதுமே உனக்கு இம்மாதிரித் தொல்லைகள் ஏற்படாது...ஒரு வேளை நான் போரில் மாண்டால்...பமீ, உன் தியாகத்தை என் ஆத்மாகூட மறக்காது!"

பமீயா, அரசி இருவருமே ஒருவரை யொருவர் தழுவிக் கொண்டு கண்ணீர் சிந்தினார்கள்.

களம் நோக்கிப் புறப்பட்டாள் அரசி! கலங்கிய கண்களுடன் விடை கொடுத்தாள் பமீ! தாயைப் பிரிந்து தவிக்கும் சேயின் நிலையில் அவள் இருந்தாள். ஆனால் அரசியோ சயத்கானை பமீயாவைக் கண்காணிக்க ஏற்பாடு செய்திருந்தாள்.

16

அல்தூனியாவின் அழகு நகர் நாசமாயிற்று!

டெல்லிப் படைகள் விரும்பிய வரையில் மக்களைக் கொள்ளையடித்தன. வீரத்தின் விளக்கமாக, இளமையின் எழிலுருவாகத் திகழ்ந்த அல்தூனியா போரில் கொல்லப்பட்டான்! அவனுடைய பிணம் அபிசீனிய அடிமை தன்...

✻ தொடர்ச்சி 8-ம் பக்கம்

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி;பி.டி.

எச்சிற் பண்டம்

சிறுகதை

அலங்காரத்துக்குப் பயன்படும அழகான சாமான்களை அற்புதமாக விலைபேசி வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேய நாடோடிகள் நாடாள விழைந்த காலமது. அவர்கள் விழைவுக்கு சிற்றரசர்கள் விட்டில் பூச்சி விளக்கானர்கள்.

நாடோடிகள்தான்; ஆனல் நாடாண்டனரே நானூறு ஆண்டுகட்கு மேல். கடைக்கண் வீச்சு உதட்டின் அசைப்பு, கழுத்தின் மின் வெட்டு, மார்பின் விம்மல், இடையின் ஒடிப்பு—இவை போதுமே வீரரின் வீழ்ச்சிக்கு. அதுபோல்தான் ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி என்னும் கடைக்கண் வீச்சுக்கு இந்தியாவின் சிற்றரசர்களை வீழ்ச்சியுறும்படிச் செய்து ஆட்சியைக் கைப்பற்றினர்.

சில இடங்களில் மிகவும் பலமான எதிர்ப்புகள் இருந்தன. எனினும் அவற்றை வீழ்த்த அவர்களிடம்தான் படைபலமும், ஐந்தாம் படையும், காட்டிக் கொடுக்கும் பார்ப்பனக் கும்பலும் இருந்தனவே! ஆங்கிலேயன் போட்ட எச்சில் எலும்புத் துண்டுகளான பதவி பட்டங்களுக்கு இந்த இனத் துரோகி நாய்கள் வாலை ஆட்டிச் சென்று அவர்கள் காட்டிமக்கின.

தென்னகத்திலே வீரபாண்டியக் கட்டபொம்மன், ஊமைத்துரை. திப்புசுல்தான்—இவர்கள் தங்கள் நாடுகாக்கப் போரிட்டாலும் விடுதலைச் சரித்திரத்திலே முதலிடம் பெற்றனர்.

மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம் ஆங்கிலேயனின் வீரமல்ல; அவர்களுப் திப்புவின் முதன் மந்திரியும் செய்த சூழ்ச்சிதான் அந்த சூழ்ச்சிக்கு வித்திட்டன பலப்பல நிகழ்ச்சிகள். அவற்றிலே ஒன்றுதான் இது.

★

மைசூர் இன்று மட்டுமல்ல; அன்றுகூட இயற்கையழகுக்கு—வளமான காட்சிகளுக்குப் பெயர் பெற்ற பிரதேசம்.

அத்தகைய இயற்கையழகு சொட்டும் பிரதேசத்தில் காதல் கவிதை பாடி களிப்புடன் ஆடி ஓடி விளையாடும் காதலர்கள் ஏராளம்!

அதோ—அங்கே தெரியும் பூந்தோட்டத்திலே இரு காதல் சிட்டுகள் இன்னிசை பாடி இன்பத்தில் திளைத்திருக்கின்றன; அருகில் போவோம்.

'கண்ணே! சுபத்ரா! நீ நாடாளும் நல்லவர், குணமிக்கவர், திப்பு சுல்தான் அவர்களின் முதன் மந்திரி பூர்ணய்யாவின் மகள். நானோ நீசன் என உங்களவர்களால் கருதப்படும் முஸ்லீம் வீரன்! உன் தந்தை முதல் மந்திரி! என் தந்தை தளபதி! பதவியிலே, பட்டத்திலே, படிப்பிலே, குலத்திலே, பொருளிலே, எதிலும் நாங்கள் உங்களைவிடத் தாழ்ந்தவர்கள்!"

"இல்லை கண்ணாளா! அழகிலே, வலிமையிலே, அறிவிலே, வீரத்திலே, எல்லாவற்றுக்கும் மேலாக குணத்திலே நீங்கள் என்னைவிட உயர்ந்தவர்கள். காதலுக்கு சாதி பேதமில்லை கண்ணாளா!"

"நீ கூறுகிருயே, அன்பே! உலகம் ஒத்துக்கொள்ள வேண்டுமே! மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே! என்னைப் பற்றிக் கவலையில்லை. என் விருப்பத்துக்கு மாருக என் பெற்றோர் நடக்க மாட்டார்கள். ஆனல் உன் தந்தை...ன் கண்ணே, ஒப்புக்கொள்ள மாட்டார்!"

"கவலை வேண்டாம் கருத்தைக் கவர்ந்தவரே! ஊர், உலகம், உற்ருர், சுற்றம், தாய் தந்தை எவர் எதிர்த்தாலும் எள்ளளவும் என் உள்ளத்தில் மெல்ல ஒலிக்கும் உங்கள் காதல் கீதத்தைத் தடுக்க முடியாது; அன்பே! செத்தாலும் நாம் ஒன்ருகப் பிணைந்து உயிர் விடுவோம்."

"உண்மைதான் என் உள்ளத்தின் எழிலரசி! அன்பும், ஆதரவும், காதலும், கடமையுமாகப் பிணைந்த இரு உள்ளங்களை ஒருவராலும் பிரிக்க முடியாது கண்ணே! கடவுளும் காதலும் ஒன்றே! ஏன், காதல் தான் கடவுள்! அது தெரியாதவர்கள் தான் உளறுவார்கள்! என் உள்ளத்தில் நீ பதித்து விட்ட உன் உருவச் சிலையை உன்னாலேகூட பெயர்த்து எடுக்க முடியாது கண்ணே!"

"உண்மையாகவா, அத்தான்?"

ஆம் கண்ணே; நீ சொன்ன அந்த சத்தான வார்த்தையான அத்தான் எப்படி இனிக்கிறது தெரியுமா! அதற்கு இந்தா ஒரு முத்தம்!"

"ஒன்றுதானு?"

"ஒன்பதாயிரம் வேண்டுமா?"

"வேண்டாம் என்பாரும் உளரோ!"

"இச்" ஒலி இன்னிசை கீதம் எழுப்புகின்றது. காதலர்கள் இன்பத்தைக் காண முனைந்து விட்டனர்.

★

அவன் திப்பு சுல்தானின் தளபதியின் மகன் அகமத். அவள் முதன் மந்திரி பூர்ணய்யாவின் மகள் சுபத்திரா.

தளபதியின் மகன் பலத்திலும் வீரத்திலும் குறைந்தவனகவா இருப்பான்? வாள் எடுத்து வீசினல் அவன் தாள் பணியாதார் இல்லை. வீரத்திலும், அழகிலும் அவன் இணையற்று இருந்தான். அவனுடன் எந்தப் போரிலும் யாராலும் போட்டியிட முடியவில்லை.

வீரத்தின் இருப்பிடம், விவேகத்தின் உறைவிடம் என்றெல்லாம் மக்களாலும், மற்றவர்களாலும் புகழ்ப் பட்டயங்கள் பெற்றவன் அகமத். தளபதியின் ஒரே புதல்வன். தன் தவப் புதல்வன்மீது தளபதி மிக்க அன்பு கொண்டிருந்தான் தந்தையே தெய்வமெனப் பெற்றிருந்தவன் அகமத். அவன் காதலி சுபத்திரா பூர்ணய்யாவின் மகள். பூர்ணய்யாவின் மகள் சுபத்திரா என்ருலும் சேற்றிலே பூத்துச் சிரிக்கும் செங்குவளைத் தாமரை போன்றவள்.

அழகு உடையணிந்து அன்ன நடை நடந்து, சின்ன இடை துவள, கடைவிழி சுழன்று தடையின்றிக் கிளம்பும் ஊற்றுபோல் கரும்பு மொழி பேசும் காரிகையைக் கண்டோர் கருத்தை இழந்து கனியைப் பறித்துண்ண விழைவர். அவள் கைப் பற்றி காதல் கீதம் பாட கன்னி வைத்தவர் பலப்பலர். வெற்றியடைந்தவர் ஒருவருமில்லை. அழகும் குணமும் கூட செல்வமும். செழித்திட்ட சேல்விழியாளை சொந்தமாக்கிக் கொள்ள மந்த மதியினர் பலர் துடித்தனர்.

அகமத், சுபத்திரா காதலர்களானதே ஒரு சுவை மிக்க நிகழ்ச்சி.

திப்பு சுல்தான் தீரனென்ருலும் அவன் திண்தோள் வலியுடையோரை பாராட்டிப் பரிசு கொடுப்பான், அவன் வைக்கும் போட்டிகளில் வெற்றி பெற்ருல்! அவன் வைக்கும் பலப்பல போட்டிகளில் புலிச் சண்டையும் ஒன்று.

காட்டிலிருந்து பிடித்துக் கொண்டு வரப்பட்ட வேங்கைப் புலியுடன், நாட்டிலே புகழ் பெற்ற மல் யுத்த வீரன் போர் புரிந்து வெற்றிபெற வேண்டும்.

ஆண்டு தோறும் நடைபெறும் இப்போட்டிகளில் பலர் முன் வருவர் அதில் கலந்து கொள்வதற்காக!

இவ்வாண்டும் அம்மாதிரி போட்டி ஒன்று நடந்தது இம்முறை போருக்கு வந்த புலி மிகவும் பயங்கரமானது. திப்பு சுல்தானே வேட்டையாடிப் பிடித்து வந்தது. அந்தப் புலியின் பயங்கரத்தைக் கண்ட எவரும் போட்டியிட முன் வரவில்லை. இதைக் கண்ட திப்பு சுல்தானுக்கு மிகவும் கோபம் வந்து விட்டது.

இந்தப் புலியுடன் போரிட்டு வெல்பவர்களுக்கு உப தளபதி பதவி தரப்படும்—என்று பறை சாற்றச் சொன்னன்.

இதைக் கேள்வியுற்ற அகமத் முன் வந்தான். அவன் தந்தை பாசத்தினல் தடுத்தார். அவன் தாய் கண்ணீர் விட்டுக் கதறி

னுள். அகமத் அவர்களுக்குத் தக்க சமாதானம் கூறினான்.

★

அவன் புலியுடன் போரிடும் நாள் வந்தது. ஊரே திரண்டு வந்தது பூர்ணய்யாவின் மகள் சுபத்திரா கூட வந்தாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அந்த வேதனையான வேடிக்கையைப் பார்க்க வேலையற்றோரிலிருந்து விவேகிகள்வரை கூடியிருந்தனர்.

ஐந்தறிவு படைத்த மிருகத்துடன் ஆறறிவு படைத்த மனிதன் தன் பலத்தைக் காட்ட போரிடப் போகிறான்.

சீறிக் கிளம்பியது புலி. சிரித்துக் கொண்டே விலகினான் அகமத். எட்டி விழுந்த புலி மறுபடியும் அவன்மீது பாய்ந்தது. கட்டிப் புரண்டனர் இருவரும். பயங்கரமான போர்; இரத்தம் நாலா பக்கமும் சிதறியது. இன்று அகமத் சாகப் போகிறான் என்று எல்லோரும் எண்ணினர்.

ஆனால் நடந்தது?

தன் பலத்தை யெல்லாம் ஒன்று சேர்த்து அந்தப் புலியின் வாயைப் பிளந்து தன் கத்தியைச் சொருகினான். ஆங்காரக் கூச்சலுடன் அலறி வீழ்ந்தது புலி. வெற்றி முகத்துடன் எழுந்து நின்றான் அகமத். அவன் கண்கள் அவனையே ஆவலோடு நோக்கும் ஆரணங்கு சுபத்திராவைநோக்கின. கண்கள் பேசியதை விளக்க முடியுமா?

முன்னுரையாகி விட்டது; இனி காதலென்னும் காவியத்தை எழுத வேண்டுமல்லவா?

வெற்றி பெற்ற அகமத்திற்கு உப தளபதி பட்டம் மட்டுமன்றி விருதுகள் பல வழங்கினான் திப்பு சுல்தான். ஊரே வெற்றி விழா கொண்டாடியது.

காதல் கீதம் பாடி, களிப்பில் ஆழ்ந்து பின் விடை பெற்றனர் காதலர்கள்.

தங்களை ஒருவன் கவனித்துக் கொண்டிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. காதல் ஒரு மதுதானே! அந்த மதுவின் மயக்கத்தில் எதுதான் தெரியும்!

மகிழ்ச்சியுடன் மாளிகையினுள் நுழைந்த மங்கைக்கு பேரிடி காத்திருந்தது; அவளை அவள் தந்தை பூர்ணய்யா அழைத்தான்.

தந்தை எதற்கோ அழைக்கிறார் என்று சாதாரணமாகவே உள்ளே சென்றாள் சுபத்திரா.

பூர்ணய்யா தன் அறையில் இப்படியும் அப்படியுமாக உலவிக் கொண்டிருந்தான். அவன் முகம் சிவந்து இருந்தது. காட்டுப் பூனை போன்ற அவன் முகம் சிவந்திருந்தால் அதன் கோரத்தை எண்ணிப் பார்க்கவே இயலாது. இருந்தும் இத்தகையவனுக்குத்தான் இந்த அழகுச் சிலை பிறந்திருக்கிறது.

உலவுவதை நிறுத்திவிட்டு தன் மகளை ஏறிட்டு நோக்கினான், ஒருமுறை!

"சுபத்திரா, இப்பொழுது எங்கே போயிருந்தாய்?"—சீறினான் சிறு மதியுடையோன்.

"தோட்டத்தில் தோழிகளுடன் விளையாடிக் கொண்டிருந்தேன்!" என்றாள்.

"தோழிகளுடனா, தோழனுடனா? என்னிடம் பொய் சொல்லாதே! எனக்குத் தெரியும், நீ எங்கு போய் வந்தாய் என்று—எவனிடம் கொஞ்சிவிட்டு வந்தாய் என்று! அந்த நீசனை நீ மறந்துவிடவேண்டும்."

"அது முடியாது, நான் அவரைத்தான் மணம் செய்து கொள்வேன்."

"ஒருக்காலும் நடக்காது; நீசனை நீபோய் மணப்பதா?"

"அவர் நீசனென்றால், நீங்கள் ஏன் திப்பு சுல்தானிடம் வேலை செய்கிறீர்கள்?"

"என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்? இப்பொழுதே போய் அந்த நீசனை என்ன செய்கிறேன் பார்," என்று கூறிவிட்டு வேகமாகப் போனான் பூர்ணய்யா.

அங்கு திப்பு சுல்தானுடன் அகமத் பேசிக் கொண்டிருந்தான்.

"அகமத், நீ சொன்னவுடன் தான் விஷயம் எனக்குத் தெரியும் என்று நினைக்காதே! எனக்கு முன்னமேயே தெரியும்; உங்கள் காதல் உள்ளபடியே உயர்ந்தது [illegible] என்பதும் எனக்குத் தெரியும்," என்றான் திப்பு சுல்தான்.

'ஆமாம் மன்னா! எப்படியாவது எங்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும். நீங்கள் சொன்னால் பூர்ணய்யா ஒப்புக் கொள்வார் என்று நினைக்கிறேன் நீங்கள்தான் உதவவேண்டும்; சென்று வருகிறேன் மன்னா! வணக்கம்." என்று கூறிவிட்டு விடை பெற்றுக் கொண்டு சென்றான் அகமத்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்குள் பூர்ணய்யா வேகமாக வந்தான்.

தன் மதிப்பிற்குரிய மதியூக மந்திரி பூர்ணய்யா ஏன் அவ்வளவு அவசரமாக வந்திருக்கிறார் என்று சிறிது வியப்புடனேயே நோக்கினான் திப்பு சுல்தான்.

"தங்களிடம் அவசரமான, அவசியமான விஷயமொன்று பேச வேண்டும். அதற்காக ஓடோடி வந்தேன்," என்றான் பூர்ணய்யா.

"மிக்க மகிழ்ச்சி. வந்த காரியம் என்ன? கூறுங்கள். ஆவன செய்யலாம்" என்றான் திப்பு சுல்தான்.

"நடக்கக்கூடாதது நடந்து விட்டது மன்னா. நெஞ்சு திடுக்கிடுகிறது. நீதிக்கும், நேர்மைக்கும் பெயர்போன திப்பு சுல்தான் அவர்களின் ஆட்சியிலே இப்படிப்பட்ட அக்ரமம் நடந்து இருக்கிறது மன்னா. சொல்லவே நா கூசுகிறது! எப்படிச் சொல்வேன்!" என்று பதறினான் பூர்ணய்யா.

"என்ன நடந்தது மந்திரியாரே? முழுக்கக் கூறினால் தானே தெரிந்து கொள்ள முடியும்! என்ன அநீதி நடந்து விட்டது? என்ன அக்ரமம் நடந்து விட்டது? செய்தவர்கள் யார்? முழு விபரமும் கூறவும்" என்றான் திப்பு சுல்தான்.

"எப்படிச் சொல்வேன் மன்னா! நெஞ்சு பதறுகிறதே! இருந்தாலும் சொல்கிறேன், இருங்கள். என் மகள் சுபத்திராவைக் கெடுத்து விட்டான் ஒரு கயவன்."

"கயவனா? யாரவன்?"

"தங்கள் தளபதியின் மகன் அகமத்-உதவித் தளபதி அவன்தான். நாட்டைக் காக்க வேண்டிய அவன் நயவஞ்சகமாகப் பெண்களைக் கெடுத்து வருகிறான். வேலியே பயிரை மேய்கிறது. தங்கள் மந்திரி பூர்ணய்யாவிடமே [illegible] லாட்டுகிறான்; என் மகளைப் பாழாக்கி விட்டான் மன்னா!"

"அப்படியா?"

"உண்மையாகத்தான் மன்னா! எச்சிற் பண்டமாக்கி விட்டாள் என் மகள். அவனைத் தண்டிக்கவேண்டும் மன்னா" என்றான்

"தண்டனையா?" என்று கூறி விட்டு சிறிது நேரம் சிந்தித்து விட்டுப் பின் தொடர்ந்து கூறினான்: "சிறிது சிந்தித்துப் பார் பூர்ணய்யா...அகமத்தைத் தண்டித்தால் நிலைமை மோசமாகும். நாய் தொட்டப் பண்டம், அதை நாய்க்கே போட்டுவிடு! பின் வேறு யாராவது உண்ண முடியுமா? ஆதலால் அகமத்திற்கே உன் மகளை மணம்முடித்துவையும். என்ன, நான் சொல்வது புரிந்ததா?" என்றான் திப்பு சுல்தான்.

இதைக்கேட்ட பூர்ணய்யா திடுக்கிட்டான். மன்னன் சொன்னபடி நடக்கவேண்டுமல்லவா?

அன்று திப்பு சுல்தான் கூறியது அவன் மனதில் வேரூன்றி விட்டது. திப்பு சுல்தானை ஒழிக்கத்திட்டமிட்டு ஆங்கிலேயருடன் கூட்டுச் சதி செய்தான் பூரணய்யா. அதற்கு மேற்கூறிய சம்பவமும் முக்கியமானதொரு காரணம்.

— இரா. மதன கோபால்

[மைசூர், சீரங்கப்பட்டிணம் ஆகியஇடங்களில் வழங்கிவரும் நாடோடிக் கதையின் மூலத்தைக் கொண்டு வரையப்பட்டது இது.]

வருந்துகிறோம்

அருமைத் தோழரும் திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளருமான அன்பில் தருமலிங்கம் அவர்களின் அன்னையார் திருமதி ஆச்சிக்கண்ணு அம்மையார் (வயது 56) 21—4—57 மாலை 4-மணிக்கு இயற்கை யெய்தினார்கள் என்ற செய்தியை வருத்தத்தோடு அறிவிக்கிறோம்.

22—4—57 மாலை 4-மணியளவில் சவ அடக்கம் நடைபெற்றபோது, கழகத் தோழர்கள் பலரும், ஊர் முக்கியஸ்தர்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டு தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். திருச்சி மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் தோழர் பொன்மலை பராங்குசமும், நகரக் கழகச் சார்பில் தோழர்கள் நடராசன், எம். எஸ் மணி ஆகியோரும் அன்னையாருக்கு மலர் மாலை அணிவித்து தங்களின் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

அன்னையைப் பிரிந்து வருந்தும் தோழர் அன்பில் தருமலிங்கம் அவர்கட்கும், அவர் தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் உரித்தாக்குகிறோம்.

கீழ்க்கண்ட இடங்களில் "முத்தாரம்" விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை :

அதிராம் பட்டணம், மதுக்கூர், மணச்சநல்லூர், ராயநல்லூர், துவரங்குறிச்சி (தஞ்சை மாவட்டம்) — ஜீயபுரம், பொன்மலை (திருச்சி மாவட்டம்)—பள்ளிப்பாளையம் (கோவை மாவட்டம்)—ராசிபுரம் (சேலம் மாவட்டம்) ஜோலார்பேட்டை, (வடாற்காடு மாவட்டம்)—காட்டு மன்னார் கோவில், மதுரைப்பாக்கம், (தென்னாற்காடு மாவட்டம்)— சமயநல்லூர், ஆழ்வார் திருநகரி (நெல்லை மாவட்டம்)— ஆண்டிப்பட்டி (மதுரை மாவட்டம்) — தேவ கோட்டை, உச்சிப்புளி (ராமனுதபுரம் மாவட்டம்).

விபரங்களுக்கு :

"முத்தாரம்"—சென்னை-6.

வறுமைத்தேள் கொட்டுகிறது..

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

தான்கள் பொருத்தப்பட்டிருக்கும்! அதில் ஒன்றை அமுக்கினால் பச்சை விளக்கு ஒளி விடும்; அதற்குக் குறிப்பிட்ட உறுப்பினர் பிரேரேபணையை ஆதரித்து வாக்களிப்பதாகப் பொருள்!

இன்னொரு பொத்தானை அமுக்கினால் சிகப்பு விளக்கு ஒளிவிடும்; அதற்கு அந்த உறுப்பினர் எதிர்த்து வாக்களிப்பதாகப் பொருள்!

கடைசிப் பொத்தானை அமுக்கினால் வெள்ளை விளக்கு ஒளி விடும்; அதற்கு அந்த உறுப்பினர் நடுநிலைமை வகிக்கிறார் என்பது பொருள்!

—இந்த வெளிநாட்டு இயந்திரத்தைத்தான் ஒன்று நான்கு லட்சம் ரூபாய் வீதம் மக்கள் சபைக்கு ஒன்றும், ராஜ்ய சபைக்கு ஒன்றுமாக இறக்குமதி செய்திருக்கிறார்கள்!

இயந்திரங்கள் இரண்டும் இன்றியமையாதவைகளா? அவை இல்லாவிடில் டெல்லியிலிருக்கும் இரு சபைகளும் பெருமளவில் பாதிக்கப்படுமா?

—எட்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டுச் செலாவணியை பாழ் செய்வதற்கு முன்பு இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டிருக்க வேண்டும் அவர்கள்!

வாக்கெடுப்பு முறையை எளிதாக்குவதற்குத்தான் இந்த இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன!

அவ்வாறானால் அடிக்கடி வாக்கெடுப்புகள் நடைபெற்று; அதனால் கணிசமான அளவு சபையின் நேரம் வீணாக்கப்படுகிறதா?

அப்படி எதுவுமில்லை!

ஆண்டொன்றுக்குக் குறைந்தது இருபது வாக்கெடுப்புகளுக்குமேல் நடைபெறுவதுமில்லை அங்கே!

மேலும் உலகத்தின் பல நாடுகளின் பாராளு மன்றங்கள் இந்த இயந்திரங்களின் உதவியில்லாமலேயே வாக்கெடுப்புகளை நடத்திக்கொண்டுதான் இருக்கின்றன.

—இந்த நிலையில்தான் எட்டு லட்சம் ரூபாய்களை—இதர முக்கிய உபயோகத்திற்காகச் சேமித்து வைக்க வேண்டிய வெளி நாட்டுச் செலாவணியை—விரயமாக்கியிருக்கிறது இந்திய அரசு!

ஆடம்பரப் பொருள்களை இறக்குமதி செய்யாதே—நாட்டவர்களுக்கு உபதேசம் செய்கிறது, காங்கிரஸ் அரசாங்கம்!

ஆனால் சிக்கனம் பிடிக்க வேண்டிய தனது சொந்த விஷயத்திலோ — மற்றவர்களுக்கெல்லாம் ஒரு உதாரணமாக நின்று; பாடம் புகட்ட வேண்டிய இந்திய தேசியத் திருவாளர்கள் தேவையில்லாத இயந்திரங்களை வெளிநாட்டிலிருந்து தருவித்திருக்கிறார்கள்!

"சாப்பிடும் உணவினைக் குறைத்துக் கொள்ளுங்கள்; குறைந்தது நபர் ஒன்றுக்கு ஒரு வேளை சாப்பாட்டையாவது தியாகம் செய்யுங்கள்" என்று பேசினார்கள் அமைச்சர் பெருமக்கள்; திட்டங்கள் நிறைவேற்றுவதற்காக செய்யப்பட வேண்டிய தியாகங்களின் அருமை பெருமைகளைப் பற்றிக் கூடை கூடையாகப் பேசித் தள்ளினார்கள்!

ஆனால் நாட்டு மக்களைப் பார்த்துப் பட்டினி கிடக்கச் சொன்னவர்களோ இன்று எழுந்து சென்று ஓட்டளிப்பதற்குச் சோம்பேறித்தனப் பட்டுக் கொண்டு இயந்திரங்கள் இரண்டினை அதிகச் செலவில் தருவித்திருக்கிறார்கள்!

ஒரு வேளை உணவினைத் தியாகம் செய்யச் சொன்னார்கள் — அவர்கள்தான் இன்று எட்டு லட்சம் ரூபாய்களை வாரி இறைத்து விளையாடி இருக்கிறார்கள்!

இதில் இன்னொரு வேடிக்கையான விஷயமும் அடங்கியிருக்கிறது.

இந்த வாக்கெடுப்பு இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் நாடு மேற்கு ஜெர்மனி.

ஆனால் மேற்கு ஜெர்மன் நாட்டுப் பாராளுமன்றத்திலே இந்த இயந்திரம் அமைக்கப்பட்டிருக்கிறதா?

இல்லை!

ஏன்?

சுழலுக்கும், சுறவுக்கும் அஞ்சி நடுங்காமல்; ஆழ் கடலுக்குள் மூச்சடக்கி முத்தெடுக்கிறானே ஏழைப் பாட்டாளி; அதை அவன் தனது ஆசை மனைவியின் கழுத்திலே அணிவித்து அழகுபார்க்க முடிகிறதா?

நாளெல்லாம் பாடுபட்டு; நெற்றி வியர்வையை நிலத்திலே சிந்தி; பட்டாடை பின்னுகிறானே ஏழை நெசவாளி; அந்தப் பட்டுத்துணி தனது ஆருயிர்க் காதலியின் இடையிலே இடம்பெறும் பேரெழிலைக் கண்டு களிக்க முடிகிறதா அவனால்?

இல்லை!

ஏன்?

ஏழ்மை; இல்லாமை; அதை விற்றுத்தான் வயிறு வளர்க்க முடிகின்ற பரிதாப நிலைமை!

—இவைதான் அவனது ஆசைகளுக்கு அணைபோட்டுத் தடுக்கின்றன!

—இதே சூழ்நிலைகள்தான் மேற்கு ஜெர்மனியிலே உற்பத்தியாகின்ற வாக்கெடுப்பு இயந்திரங்களை அந்த நாட்டுப் பாராளு மன்றத்திலே அமைத்து; பயன் நுகர முடியாமல் தடுத்து நிறுத்துகிறது!

ஏன் உங்கள் நாட்டுத் தொழிற்சாலை தயாரிக்கும் இயந்திரத்தை உங்கள் நாட்டிலே பயன்படுத்தவில்லை— என்று கேட்டதற்கு அந்த அரசு பதிலளித்திருக்கிறது; "அதற்கு எங்கள் பொருளாதாரம் இடந்தரவில்லை"—என்று!

மேற்கு ஜெர்மனிக்கு வாக்கெடுப்பு இயந்திரம் அமைக்க வசதியில்லை!

ஆனால் ஏழை இந்திய அரசோ இரு வாக்கெடுப்பு இயந்திரங்களை அமைத்துக் கொள்கிறது!

வேடிக்கை; வேடிக்கை! வேதனை; வேதனை!!

○

அபிசீனிய அடிமை..

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

யாகூத்தின் முன் கொண்டு வந்து போடப்பட்டது.

யாகூத், செத்துக் கிடந்த அந்த சிங்கத்தைப் பார்த்து பயங்கரமாகச் சிரித்தான்.

"நீ ஒரு உயர்ந்த போர்வீரன்! வீரத்தின் விளை நிலம்! ஆனாலும் முட்டாள்! அழகுக்கு வீரத்தை ஆராதனைப் பொருளாக்கி விட்டாய்—பயித்தியக்காரன்! இதோ, அதன் பலன்!" என்று பிணத்தைப் பார்த்துப் பேசியபடியே மீண்டும் சிரித்தான்.

யாகூத் கைகளைத் தட்டினான்! போர் வீரர் இருவர் அவன் முன் வந்து நின்றனர்.

"இந்தப் பிணத்தைத்தான் அரசி கைது செய்யப்பட்டவுடன் அவளுக்குப் பரிசாக அளிக்க எண்ணியிருக்கிறேன். ஆகவே, 'இதைப் புதைத்து விடாதீர்கள்,' என்று ஆணையிட்டான் யாகூத்.

பமீயாவைப் பார்க்க வேண்டும்; கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆசையைவிட, அரசி ருசியாவைப் பழிவாங்க வேண்டும்; சித்ரவதை செய்ய வேண்டும்; அவள் உள்ளம் நொந்து துடிக்க அதைப் பார்த்து ரசிக்க வேண்டும்-என்ற எண்ணமே அவன் மனத்தில் மேலோங்கி நின்றது. அவன் உத்தரவு நிறைவேற்றப் பட்டு அவமானத்தால் மனம் குன்றி அவனைப் பார்க்கவும் வழியின்றி நிற்கும் ருசியாவிடம்—வேதனைப் பிழம்பாய் நிற்கும் அவளிடம்—அவளுடைய கணவனின் பிணம் அவளிடம் ஒப்படைக்கப்படும்போது, அவள் அடையும் ஏமாற்றமும் வேதனையும், அன்று சிறையில் பமீயாவைக் காணாமல் அவன் பட்ட வேதனைக்கு ஈடாகுமா என்று ஆராய்ந்து கொண்டிருந்தான் யாகூத்!

'பழி வாங்க வேண்டும், பழி வாங்க வேண்டும்' என்ற எண்ணமே அவன் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

"மகராஜ், அரசியைக் கைது செய்து விட்டோம்," என்று போர்வீரர் வந்து கூறினர்.

"அச்சா!"—யாகூத் உரத்துக் கத்தினான். வாழ்க்கையின் மகத்தான சாதனை ஒன்று முடிந்து விட்டதாக அவன் மனம் களித்தது.

"என் கட்டளையையும் நிறைவேற்றி விட்டீர்களல்லவா?" என்றான்.

தலையசைத்தனர் போர் வீரர்கள்!

"காந்தக் கண்கள்...இனி அவை வெறும் புண்கள்!"—எக்காளச் சிரிப்பு சிரித்தான் யாகூத்.

துடித்துத்துவள கைதி அவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டாள்.

"பமீ!" என்று கத்தினான் யாகூத்! மறுகணமே வேரற்ற மரம் போல தரையில் வீழ்ந்தான்.

பனிமலர்கள் — பறிக்கப்பட்டு விட்டன! பரவசமூட்டும் பமீயாவின் கண்கள் தோண்டப்பட்டு விட்டன! வண்டெனச் சுழன்ற வசீகரக் கண்கள் கட்டளைப்படி புண்களாக்கப்பட்டு விட்டன!

அரசி ருசியாவுக்குச் செய்யப்படவிருந்த கொடுமை, அரசியாக நடித்து நோன்பிருந்த பமீயாவிற்குச் செய்யப்பட்டுவிட்டது!

கண்ணற்ற நிலையில் அரசியைக் கண்டு களிக்க எண்ணி யாகூத் இட்ட கட்டளையின் விளைவாக, இன்னுயிர்க் காதலியைக் கண் களைந்த ஓவியமாகக் காணுகின்ற வெங்கொடுமைக்கு யாகூத் ஆளானான்!

வைத்த பொறியில் தானே அகப்பட்டுக் கொண்டான்.

கண்களில் உதிரமும் கண்ணீரும் கலந்து வழிய, "பமீ!" என்று சத்தமிட்ட உருவத்தை நோக்கி, ஓசை வந்த திசையறிந்து ஓடித் தழுவினாள் பமீயா! அதற்குள் யாகூத்தின் முகத்தில் போர்வீரர்கள் நீர் தெளித்தனர். யாகூத் கண் விழித்தான்.

பழிவாங்கும் உணர்ச்சி அளித்துவிட்ட பலனைக் கண்ணெதிரே கண்டான் யாகூத்!

"பமீயா, நீங்காத தவறிழைத்து விட்டேன் உனக்கு. என் ஆணையை ஆத்திரத்தில் ஆள் மாறி நிறைவேற்றிவிட்டார்கள், முட்டாள்கள்!"

"இல்லை யாகூத்! அவர்கள் அரசியைத் தேடி வந்தபோது நான் அரசியாக நடித்து நோன்பிருந்தேன், அரசியின் கட்டளைப்படி! அவர்கள் என் கண்களைத் தோண்டிய பொழுது, நான்தான் நான் அரசியல்ல-வென்று கூறி அரசியைக் காட்டிக் கொடுக்க மனமில்லாமல் இருந்துவிட்டேன். அரசிக்கு-என்னை உப்பிட்டு வளர்த்த அவர்களுக்கு, என் வாழ்நாளில் நான் என்றுமே துரோக மிழைக்க எண்ணிய

✻ தொடர்ச்சி 12-ம் பக்கம்.

தணிக்க முடியாதது விடுதலைத் தாகம்!

✲ 4-ம் பக்கத் தொடர்ச்சி

ராக அங்கேரி ராணுவத்தைத் திருப்பியது. இராணுவத் தலைமைத் தளபதி யுத்த மந்திரியிடம் சென்று போராட்டத்தை நிறுத்த சர்க்கார் ஆவன செய்யும்படி கேட்டுக் கொண்டார். ஆனால், யுத்த மந்திரி தளபதியை சுட்டு வீழ்த்திவிட்டார்; உடனே, இராணுவத்தினர் சர்க்காருடன் உறவை முறித்துக் கொண்டு, புரட்சிக்கு ஆதரவாகத் திரும்பினர். அங்கேரி அதிகாரிகள் தங்கள் மக்கள் மீத டாங்கிகளை ஏவி, அவர்களைக் கோபமூட்டினர்; ஆவேச மடைந்த மக்கள், ரஷ்ய டாங்கிகளைத் தாக்க ஆரம்பித்தனர் ரஷ்யப் படையினர் தங்கியிருந்த ஒரு ஹோட்டலை அங்கேரி டாங்கிகள் தகர்த்தெறிந்தன. இராணுவ அச்சகம் ஒன்றை அங்கேரி சிப்பாய்கள் கைப்பற்றி, புரட்சிக்கு ஆதரவாக துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டனர். இறுதியில் அங்கேரி ஆகாய விமானப் படையும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகத் திரும்பியது. அங்கேரி விமானப் படை முழுக்க முழுக்க சோவியத் விமானங்களைக் கொண்டது; ரஷ்யர்களால் பயிற்சிக்கப் பட்டது. ஆனால் அதே ஆகாய விமானப் படை "சோவியத் துருப்புகள் 12 மணி நேரத்தில் புடாபெஸ்ட்டை விட்டு வெளியேற வேண்டும்," என்று எச்சரிக்கை விடுத்தது. தங்கள் பாதுகாப்புக்காக அண்டை நாட்டில் படை சேர்த்து, பயிற்சி தந்து, அப்படையின்மீது ரஷ்யர்கள் இனியும் நம்பிக்கை வைத்தால் அது அபாயமே தவிர, பாதுகாப்பாகாது; இதுதான் அங்கேரி தரும்பாடம். புடாபெஸ்டிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் நடந்த சம்பவங்கள் இதை மெய்ப்பிக்கின்றன. சமயத்தில், அங்கேரிப் படை அங்கேரிக்காகத்தான் போராடியது; கம்யூனிஸ்டுகளுக்காக அல்ல. சோவியத் சிப்பாய்களையே நம்பமுடியாத நிலை அங்கேரியில் ஏற்பட்டது. சில ரஷ்ய சிப்பாய்கள் சுட மறுத்தனர்; சிலர் மாடி வீட்டிலிருந்து தப்பி ஓடி காடுகளில் பதுங்கிக் கொண்டனர். காரணம், அங்கேரி மொழி புரிந்துகொள்ளும் அளவுக்கு நீண்ட நாட்கள், அங்கே ரஷ்ய சிப்பாய்கள் தங்கி யிருந்ததும்; அவர்கள், கம்யூனிஸ்டு ஆட்சியில் மக்களுக்கு இருந்த வெறுப்பை உணர்ந்திருந்ததுமே ஆகும். புரட்சி ஏற்பட்ட பிறகு அங்கேரியினுள் நுழைந்த ரஷ்ய துருப்புகளால்தான்— அதுவும் தளபதிகள் ஆணைப்படி மேற்கொண்ட செயல்களால்தான் அதிக சேதங்கள் ஏற்பட்டன.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் கிடந்த ரஷ்ய சிப்பாய் ஒருவர் பின்வருமாறு கூறினர்: "நானும், எனது படையினரும் ருமேனியாவிலிருந்து கொண்டு வரப்பட்டோம்; அமெரிக்கத் துருப்புகள் அங்கேரி எங்கணும் வந்து நிறைந்து விட்டதாகவும்; அங்கேரியில் பாஸிஸ்டுகளும், முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் பாமர மக்களுக்கெதிராகப் போராட்டம் நடத்துவதாகவும் எங்களிடம் கூறப்பட்டது; ஆனால், இவை உண்மையல்ல."

ரஷ்ய டாங்கிப் படையினர் சில சமயங்களில் மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தினர். 'க்யூ'வில் சோற்றுக்காகக் காத்துக் கிடந்த நிராயுதபாணிகளான அங்கேரி மக்கள்மீது ஒரு ரஷ்ய டாங்கி பயங்கரக் கூச்சலிட்டுக் கொண்டு சென்றது. திகைப்பும், திகிலும் கொண்ட மக்கள் பாதுகாப்புக்காக கலைந்தோடினர்; ஆனால், அந்த டாங்கியினர் அம்மக்களை நோக்கிச் சுட்டனர்; ஆண்களும், பெண்களுமாக ஆறு பேர் இறந்தனர்.

மற்றொரு ரஷ்ய டாங்கி புடாபெஸ்ட் நகரத்து வீதியொன்றில் இரண்டு ஆஸ்பத்திரிகளுக்கு நடுவே இருந்து கொண்டு இடமும் வலமுமாக மாறி மாறி குண்டுகளைப் பொழிந்தது. ஒரு ஆஸ்பத்திரி மிகவும் சேதமடைந்தது; நோயாளிகளை தீயிலிருந்து காப்பாற்ற வேண்டியிருந்தது; அந்த ஆஸ்பத்திரியில் காயமடைந்த பல ரஷ்ய சிப்பாய்களும் இருந்தனர்; சோவியத் நாட்டு டாங்கியின் குண்டு மாரிக்கு இலக்கான அவர்கள் தங்கள் தாய் நாட்டு டாங்கி-ஆஸ்பத்திரியை நோக்கிச் சுட்டதின் பயனை அனுபவிக்க நேரிட்டது.

அங்கேரி பாதுகாப்புப் போலீஸ் படை கம்யூனிஸ்டுகள் பக்கமிருந்து போராடியது; கம்யூனிஸ்டுகளோடு, இந்தப் படையினரும் மக்களின் பெருங் கோபத்துக்கு ஆளாயினர். சோவியத் பாதுகாப்புப் படையின் ஒரு அணியான அங்கேரி போலீஸ் படையினர் பலர் அடிக்கப்பட்டனர்; சுடப்பட்டனர்; தூக்கிலிடப்பட்டனர்; பலர் கைதிகளாக்கப்பட்டனர். பாதுகாப்புப் படை போலீஸ் ஒருவன் சாதாரண உடையிலிருக்கும்போது ஒரு கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டான்; 'கொல்லுங்கள்' 'கொல்லுங்கள்' என்று குரல் கூட்டத்தில் கிளம்பின. ஆனால் 'சுதந்திரப் போராட்டக்காரர்கள்' அணியும் பச்சை வெள்ளை சிவப்பு நிறமுள்ள பட்டை அணிந்த அங்கேரியன் ஒருவன் அந்த போலீஸ்காரனைக் கைது செய்து பத்திரமாகக் கொண்டு போய் சிறையில் தள்ளினன்.

இதுபோன்ற சம்பவங்கள் மேலும் மேலும் நடந்துகொண்டேயிருந்தன. ஏற்பட்ட சேதம் இவ்வளவு என்று யாராலும் கூறமுடியாது; குத்து மதிப்பாக "இவ்வளவு" இருக்கும் என்றுதான் சொல்லலாமே யொழிய, சரியான புள்ளி விவரத்துடன் "இவ்வளவு தான்" என்று கூற முடியாது. ஏனெனில் காயம்பட்ட அங்கேரியர்கள் ஆஸ்பத்திரிக்குச் செல்ல மறுத்துவிட்டனர். நிலைமை கட்டு மீறிச் சென்ற போது கம்யூனிஸ்டு சர்க்கார், தான் முன்பு பிறப்பித்த பைத்தியக்காரத்தனமான பல உத்தரவுகளை ரத்து செய்தது. இது போதாதென்று, கம்யூனிஸ்டு முதலமைச்சர் இம்ரே நாகி "சுதந்திரமான தேர்தல்—கூட்டுப் பண்ணை முறை—ஒரு கட்சி ஆட்சியை ஒழித்தல்—மத சுதந்திரம்—மாஸ்கோ பிடிப்பற்ற பூரண சுதந்திரம் அடைதல்" ஆகியவற்றை நிறைவேற்றுவதாக வானொலி மூலம் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், ஆவேசமடைந்த மக்கள் கூட்டம் பாராளுமன்றத்திற்கு முன்பு கூடி "கொலைகார சர்க்கார் ஒழிக! கொலைகார சர்க்கார் ஒழிக!" என்று முழக்கமிட்டது. குமுறும் எரிமலையாம் மக்கள் சக்தியின் முன்னே மண்டியிட்டனர் கம்யூனிஸ்டுகள். எட்டாண்டுகளாக கம்யூனிஸ்டுகளால் சிறை வைக்கப்பட்டிருந்த ஜோசப் கார்டினல் மிண்ட்ஸென்ட்டி என்ற அறுபத்து நான்கு வயதுள்ள அங்கேரித் தலைவனை அந்நாட்டு இராணுவம் விடுவித்தது; புரட்சி ஆரம்பித்த ஒன்பதாம் நாள் துப்பாக்கிகள் ஓய்ந்தன. "அங்கேரி மண்ணில் ஒரு ரஷ்யன்கூட இல்லாமல் துரத்துவதே எங்கள் முதல் வேலையும், முழு ஊக்கமும் கொண்ட செயலாகும்; இனிமேல் இங்கு எவனும் கம்யூனிஸ்டாக இருக்க மாட்டான்" என்று ஒரு அங்கேரியன் கூறினன்.

ரஷ்ய துருப்புகள் டாங்கிகளையும், விமானங்களையும், துப்பாக்கிகளையும் பயன்படுத்தி கற்பனை செய்யக்கூட முடியாத ஈவு இரக்கமற்ற மிருகத்தனமான முறையில் அங்கேரிப் புரட்சியை ரத்த ஆற்றில் மூழ்கடித்த செயல் அகிலத்தை ஆருத துயத்தில் ஆழ்த்தியது. இது குறித்து 'நியூயார்க் டைம்ஸ்' என்ற ஏடு பின் வருமாறு கண்டித்தும், துக்கம் தெரிவித்தும் எழுதியுள்ளது:

"படுகொலை நடத்திய சோவியத் சர்க்கார்மீது நாம் குற்றம் சாட்டுகிறோம்; அங்கேரி மக்களுக்கு அநீதியும், துரோகமும் இழைத்ததோடல்லாமல், மட்டமான சூழ்ச்சிகளைக் கையாண்ட சோவியத் சர்க்கார்மீது நாம் குற்றஞ் சாட்டுகிறோம். அங்கேரிக்கு எதிராக மாபெரும் தீங்கு பயக்கும் குற்றமிழைத்து, என்றென்றும் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாத பழியைச் செய்த சோவியத் சர்க்கார் மீது குற்றஞ் சாட்டுகிறோம்.

"பழிச் செயல்கள் நடந்து விட்டன; மாவீரர்கள் பலர் மாண்டு விட்டனர். ஆனால் சுதந்திர உணர்ச்சி வாழுகிறது. சுதந்திரத்திற்குப் போராடியவர்கள் சிந்திய செந்நீரிலே அது வளருகிறது. அங்கேரி மக்கள் இதை மறக்க மாட்டார்கள்; நாமும் மறக்க மாட்டோம். சுதந்திரப் போராட்டம் வெற்றியடையும் வரை, போராடும் மனோ திடத்தை அழியா வெறுப்பிலும், அழுத கண்ணீரிலிருந்தும் அங்கேரியர்கள் வெற்றி பெற்றிருக்கின்றனர்"

('ரீடர்ஸ் டைஜஸ்ட்' ஏட்டிலிருந்து மொழிபெயர்ப்பு: டி. கலியபெருமாள்)

✲

ஓவியர் தேவை

போட்டோ கலரிங் லையன் டிராயிங், நன்கு தெரிந்த திறம்மிக்க ஓவியர் தேவை. மாதிரி டிசைன்களுடன் விண்ணப்பிக்க.

நாதன் அன் கம்பெனி : : திருச்சி-8.

முகத்திரண்டு புண் பெற்ருேர்

முறைகெட்ட செயல் பாரீர்!

'மக்கள் நலம் பேணும் மகானுபாவர்கள் நாங்களே!' என்று மார்தட்டிக் கூவும் ஆட்சியாளர்கள், மக்களின் வரிப் பணத்தை எந்த அளவில் 'விழலுக் கிறைத்த நீராக' ஆக்கி வருகிருர்கள் என்பதற்கான ஆதாரங்கள் பல வற்றைப் பல முறை எடுத்துக் காட்டி வந்திருக்கிருேம்.

கண்ணற்ருேரும் செய்யத் தகாத அத்தகைய வீணை செயல்கள் 'முகத்திரண்டு புண் பெற்ருே'ரால் செய்யப்படுவது குறித்து வேதனைப் படுகிருேம்; வெட்கப்படுகிருேம்!

கதர் அபிவிருத்தி-கிராமத் தொழில் அபிவிருத்தி—என்ற பெயரில், நாட்டிற்கும் காலத்திற்கும் ஒவ்வாத முறையில் வரிப் பணத்தை மட்டுமல்ல; மக்களின் உழைப்பையும், முயற்சியையும் கோணல் வழியிலே திருப்பிவிடுகிருர்கள்;

விளைவோ 'சூன்ய வெளி'யாகத்தான் தெரிகிறது!

ஆளவந்தாரின் அத்தகைய 'அழிவுக் கதை'களில் ஒன்றுதான் இங்கே தரப்படுகிறது.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் தோழர் பி எஸ். நடராசன் என்பவர் எழுதியிருக்கும் கடிதமொன்றில் கீழ்க்கண்ட பகுதிகள் காணப்படுகின்றன:

"1958—54-ம் ஆண்டில் தம் அரவணைப்பில் நான்கு இலட்சம் நபர்களே வேலை செய்திருக்க, அதற்கு அடுத்த ஆண்டில் 12 இலட்சம் நபர்கள் வேலை செய்துள்ளனர் என்று கதர்—கிராம கைத்தொழில் குழுவின் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலே குறிப்பிட்டுள்ள 7-96 (ஏறத்தாழ 8 இலட்சம்) நபர்கள், நூற்பவர், நெசவாளர், மற்றும் அத்துறையில் ஈடுபட்டிருப்போர் என்ற நிலையில் கதர்த் தொழிலில் பணியாற்ற இடம் பெற்றுள்ளனர். அவர்கள் மொத்தத்தில் 24-8 மில்லியன் சதுர கெஜத் துணி உற்பத்தி செய்துள்ளனர்.

அத்துணியின், விற்ற மொத்த விலை மதிப்பு 4-77 கோடி ரூபாய் (அல்லது 480 இலட்சம்), ஒவ்வொரு நபரும் ஈட்டிய ஆண்டு வருமானம் ரூ. 60 ஆகும்-என்று மேற்படி விவரம் உணர்த்துகிறது. அவர்கள் பயன்படுத்திய பஞ்சின் மதிப்பு, கதர்-கிராம கைத்தொழில் குழு—விற்பனை சங்கங்கள் முதலியவற்றிற்காகும் செலவு ஆகிய எதுவும் கழிக்கப்படவில்லை.

மனித உழைப்பு—ஆற்றல்—பணம் ஆகிய மூன்றும் பெருத்த அளவில் பாழ்படுத்தப் படுவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். எட்டு இலட்சம் தொழிலாளர்கள், ஒரு முழு ஆண்டு உழைப்பில் குறிப்பிடத்தக்க மிகுதியான செல்வத்தை நாட்டிற்கு அளிக்க முடியும்.

எட்டு இலட்சம் ஏக்கர் காடுகளை அழித்து மதிப்புயர்ந்த இரப்பர் செடிகளைப் பயிர் செய்வது அவர்களால் இயலும் என்பதை எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். அதன் விளைவாக நாட்டின் இரப்பர் உற்பத்தி மும்மடங்காக உயரும்.

300 அல்லது 400 கல் தொலைவுக்கு அவர்களால் பாசனத்திற்குப் பயன்படக்கூடிய கால்வாயை வெட்டுவது சாத்தியமாகும்.

"தேசத்தின் பொருளாதாரம் தீவிரமாக வளம்பெற வேண்டும் எனக் கருதிக் கொண்டிருக்கின்ற நாம், விஞ்ஞான ரீதியில் திட்டம் தீட்டுவதற்கு முரணாக இருக்கக்கூடிய பொருளாதார நடைமுறைகளைக் கைவிட்டு வருவதற்கான நேரம் வந்துவிட்டது."

மே முதல்வாரம் கிடைக்கும்!

சத்தான கருத்துக்கள்—
வித்தகர் பேருரைகள் நிறைந்த
இலக்கியப்பேரிதழ் சிறந்த அமைப்புடனும், புதிய மெருகுடனும் வெளிவருகிறது!

"முத்தாரம்"

பன்மொழிப் புலவர் அப்பாதுரை
புலவர் குழந்தை
பி. சி. கணேசன்
க. அறிவழகன்—ஆகியோர்
ஆராய்ச்சிக் கட்டுரைகள் தருகின்றனர்!

'முத்தாரம்'

★★ இந்திய உப கண்டத்தில் தமிழுக்கு நிகர் இலக்கிய வளம் பெற்று விளங்கும் வங்க மொழியின் வற்ருத கற்பனை ஊற்ருக விளங்கும் சிறந்த சிறுகதை யொன்று அழகும் பொருளும் குன்ருமல் தமிழில் தரப்படுகிறது!

★★ 'ஆண்களுக்கு இதயமில்லை' காந்தம் போல் உங்கள் இதயத்தைப் பற்றி விடும் சிறுகதை!

'முத்தாரம்'

★★ 'டிக்கன்சின் காதலிகள்'—உலகப் புகழ் பெற்ற பெருங்கதைப் பூமான்; ஆங்கில இலக்கியத்தின் அழகு மணி மகுடம், வண்டாக மாறி மலருக்கு மலர் தாவிய சுவைமிக்க வரலாற்றினை உள்ளது உள்ளபடி சொல்லும் உணர்ச்சிக் கட்டுரை; முல்லை சத்தி எழுதுகிருர்!

★★ குற்றமும், தண்டனையும்- ருஷ்ய இலக்கியத்தின் மகத்தான பெருங்கதை தமிழில் வருகிறது.

'முத்தாரம்'

ஓவியர் கே. மாதவன் தரும் முகப்பு
இதழுக்கே தனிச் சிறப்பு!

ஆசிரியர் மு. க. வின் கவிதை நடைச் சிறுகதை உண்டு!

இன்றே விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்குச் சொல்லிவையுங்கள்!

விற்பனையாளர்கள் தேவையான முன் பணம் அனுப்பி வைக்காவிடில் அதிகப் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது!

கோயில் காளை

பிறைவானம்

'தும்...தும்...' என்று கொல்லைப்புறத்திலிருந்து திடீரென்று எழுந்த சப்தத்தைக் கேட்டு எழுந்து ஓடினார் அப்பா!

அங்கே அவர் கண்ட காட்சி அவரது உடலை உலுக்கிற்று. நீண்ட கம்பொன்றைக் கையிலேந்தி கொல்லையிலிருந்து ஒரு 'கொடியவனை' வெளியேற்றிக் கொண்டிருந்தான் அவரது மகன் மதனன்.

"மதனா!" என்று கத்தினார் அப்பா!

மதனன் திரும்பவில்லை; காரியத்திலேயே கண்ணாயிருந்தான். "திருட்டுக் கழுதை! இந்தப் பக்கம் வராதே, வராதே என்று எத்தனை தரம் பாடம் கற்பித்தும் புத்தி வரலியே, உனக்கு! தொலை சனியனே!"—என்று கத்திக் கொண்டே அந்தக் 'கொடூர உருவத்தினை'த் தாக்கிக் கொண்டிருந்தான்.

கம்பு சிதைந்து நொறுக்கியது. 'அவனும்' முதுகிலே ரத்தத் தழும்புகளை ஏற்றுக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தான்.

"நிறுத்தடா மதனா!..."—அப்பாவின் குரலில் எங்கிருந்தோ வந்து புகுந்துவிட்டிருந்தது கோபம்!

மகன் கம்பை வீசி எறிந்து விட்டு அப்பாவைப் பார்த்தான்.

"அங்கே பாரடா முட்டாள்!..." என்று அப்பா கையைக் காட்டினார்.

மதனன் பார்த்தான். அவனால் அடித்துத் துரத்தப்பட்ட அந்தப் 'பெரிய உருவம்' மதனனைக் கோபக் கண்களால் விழித்துப் பார்த்துவிட்டுப் பறந்தது.

"நல்ல உதைப்பா...!" என்றான், மதனன்.

"அடப் பாவி, என்ன பாவம் செய்து விட்டாய்! செய்யலாமா இப்படி? ஐயையோ!" என்றார் அப்பா!

மதனனுக்கு ஒன்றுமே புரியவில்லை; அவன் என்னதான் அப்படி மகத்தான தவறு செய்து விட்டான்!

"பின்னே என்னப்பா! கொல்லையைப் பாருங்கள்—பாடுபட்டு—பண்படுத்தி—நீரூற்றி வளர்த்த பயிர்-நமக்கு உயிரூட்டும் வியாபாரப் பொருள் இப்படி அநியாயமா நாசமாயிட்டுதேப்பா!..."

—மதனனின் குரல் தழுதழுத்தது. 'கண்'ணைப் போல் காத்து வளர்த்த பயிர், சிதைந்து சின்னா பின்னமாகிக் கிடப்பதைக் கண்ட அவன் பொறுப்பானா? உழைத்த உடலல்லவா; விளைவை எதிர்பார்த்துக் கிடந்த உள்ளமல்லவா?

"இருந்தாலும் நீ செய்தது பெரிய தீம்புடா...!"

"என்னப்பா?..."

"அது கோயில் காளையடா, கோயில் காளை!..."

"இருந்தால் என்னப்பா? செய்தது அழிவுதானே! நமக்கிழைத்தது கொடுமைதானே!..."

"அட முட்டாளே! ஆண்டவனுக்குரிய மாட்டை அடிக்கலாமா? அடுக்குமா அது? என்ன நேரப்போகிறதோ; என் குடி கெடத்தான் போகிறதோ!..."

—தந்தையின் கண்களில் நீர் துளிர்த்தது. தளர் நடை போட்டு உள்ளே நுழைந்தார்.

குழந்தைபோல் வளர்ந்த 'விளைச்சல்' கோரமாகச் சிதைக்கப்பட்டிருக்கிறது; ஒரு மாதத்திற்கு உணவூட்டும் காய்கறிகள் காளைக்கு உணவாகியும், கால்களில் சிக்கிச் சிதைந்தும் பரிதாபகரமாகத்தோன்றுகிறது; நினைத்தாலே நெஞ்சம் 'பகீர்' என்கிறது; ஆனால் தந்தையோ அழிவுக்குக் காரணமான கோயில் காளை ஆண்டவனின் சொத்து, அடிக்கலாமா அதை? 'ஐயையோ குடி கெட்டதே!' என்று புலம்புகிறார்!

—மதனன் சிதைந்து கிடக்கும் நிலத்தைக் கண்டு குமுறி எழுந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு விட்டிற்குள் நுழைந்தான்.

★

"மாரப்பன் இருக்கானா உள்ளே?..."

—யாருடைய குரல் அது? இந்த நடு நிசியில் ஏன் இந்த விசாரணை?

"ஏ, மாரப்பா!...மாரப்பா! கொஞ்சம் வெளியே வா!..."

—புரிந்து விட்டது மாரப்பனுக்கு—அதாவது மதனனின் தந்தைக்கு—அது யாருடைய குரல் என்று! மறுகணம் அவன் உடல் 'குப்'பென்று வியர்த்தது!

"ஏ, மாரப்பா!..."

—மாரப்பனின் உடல் வெட வெடவென்று நடுங்கியது. பக்கத்தில் படுத்திருந்த மதனனை கவனித்தான். அப்போதுதான் அவன் உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்ததையும் கேட்டான்.

"கோவில் காளையடா... கோயில் காளை! அடித்து விட்டாயே!... பாவி!... பாவி! அப்பா!... அப்பா!... திட்டாதீங்கப்பா... திட்டாதீங்க!... எனக்கு பயமாயிருக்கப்பா!"

"ஏண்டா மாரப்பா, கதவை உடைக்கணுமோ? ......திமிர் பிடித்த கழுதை!..."

—கோயில் தர்மகர்த்தாவின்குரலில் புதிய கடுகடுப்பு இப்போது தெரிந்தது.

மாரப்பன் எழுந்தான். கதவைத் திறந்தான். வெளியே தர்மகர்த்தா நின்றுகொண்டிருந்தார். அவர் கையிலே கயிறும், கயிற்றின் முனையிலே அந்தக் 'கோயில் காளை'யும் இருந்தது!

"ஏண்டா மாரப்பா! மானங்கெட்ட கழுதை! கோயில் மாட்டை கொன்னுட்டியேடா துரோகிப் பயலே!"—தர்மகர்த்தாவின் கண்களிலே பளிச்சிட்ட பயங்கரக் கோபத்தின் விளைவு என்னவாகுமோ என்று அறிந்துகொள்ள முடியாது தடுமாறினான் மாரப்பன்!

"பிச்சைக்காரக் கழுதை! இறங்குடா கீழே!..."

—தர்மகர்த்தாவின் கையிலே இருந்த வலிய "வாக்கிங் ஸ்டிக்" மாரப்பனின் தோள்பட்டையில் படாரென்று தாக்கியது!

"கொல்லைக்குள் அடியெடுத்து வைத்தால்தான் என்ன; அதற்கு இப்படியா உதைப்பது? உன் உயிரைப் பறிக்கணுமே பரதேசி நாயே!..."

இரண்டாவது அடியில் மூலம் 'எனக்கு ஏது இருதயம்' என்பதை நிரூபித்தார், தர்மகர்த்தா! அடி பலமாக விழுந்து விட்டது!

"ஐயோ" என்று அலறினான், மாரப்பன்!

தர்மகர்த்தா கோயில் காளையினும் கொடிய மிருகமானார். அடி தாங்காது 'ஐயோ, ஐயோ' என்று அலறினார் மாரப்பன்.

"நான் ஒன்றும் செய்யிலே எசமான்...என் மவன்...சாப்பாட்டுலே மண்ணைப் போட்டுடிச்சே இந்த மாடுன்னு... தெரியாமே அடுச்சுட்டான், எசமான்!..."

காதில் வாங்குவாரா, அவர்; தர்மகர்த்தாவாயிற்றே!

கையிலிருந்த கம்பு கடமை தவறாது பணியாற்றிக் கொண்டிருந்தது.

தெருவிலே பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது!

கண நேரம்...

திடீரென்று வீட்டுக் கதவு திறந்தது. சப்தம் கேட்டு கண் விழித்த மதனன்தான் எழுந்தோடி வந்தான். சாதாரணமாக அல்ல; கையிலே கம்போடு; முன் ஜாக்கிரதையாக!

'கட முட' என்ற பெரும் சப்தத்தோடு பேரிடி ஒன்று எழும்பியது; 'பளீர்' என்று தோன்றி மறைந்தது மின்னல் ஒன்று. மின்னல் ஒலியில் கையில் கம்போடு காட்சியளித்த மதனனைக் கண்டுவிட்டது காளை மாடு!

மறுகணம் உடம்பை சிலிர்த்திக் கொண்டது. மாலையில் பட்ட அடி—அவஸ்தை அதன் நினைவுக்கு வந்துவிட்டது! மதனன் தன் ஒரே பயங்கர எதிரியாகத் தோன்றியது அதற்கு.

தெருவிலே கூட்டம் சேர்ந்து விட்டது!

மதனன் தந்தையின் நிலையைப் புரிந்து கொண்டு வெளியே பாய்ந்தான், கம்புடன்.

மறுகணம் யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுவிட்டது. கம்பைக் கண்ட கோயில் காளை பயந்து பாய்ந்தது. மறுகணம் தர்மகர்த்தாவின் கையிலிருந்த கயிற்றோடு வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தது.

தர்மகர்த்தா பீதியிப்போய் விட்டார். தெருவில் இருந்த கூட்டம் சிதறி ஓடியது.

வாலைத் தூக்கிக்கொண்டு நாலுகால் பாய்ச்சலில் ஓடிக் கொண்டிருந்தது காளை!

கணநேரத்தில் ஒரு பயங்கரம் நிகழப் போகிறது என்பதை யாரும் அப்போது உணரவில்லை!

வெறிபிடித்த காளை தெரு முனையில் ஓடிக் கொண்டிருந்போது "ஐயோ" என்ற ஒரு அலறல் எழும்பியது; குழந்தையின் குரல்போல் கேட்டது அது! உண்மைதான்; கோயில் காளையின் வலுவான குளம்புகளிலே சிக்கிவிட்டது ஒரு குழந்தை!

தர்மகர்த்தா 'யார் பெற்ற பிள்ளையோ' என்ற நினைவுடன் ஓடினார்!

ஆனால், சிறிது நேரத்திற்கெல்லாம் "ஐயோ, மகனே!" என்ற பயங்கர அலறல் எழும்பியது!

★

கோயில் காளையால் சிதைக்கப்பட்ட மதனனின் கொல்லை மீண்டும் தழைத்துவிட்டது—ஆனால் கோயில் காளையின் காலடியில் சிக்கிய தர்மகர்த்தாவின் குழந்தையோ—வாடியது வாடியதுதான்! 'என் குடி கெடப்போகிறதே' என்று புலம்பிய மாரப்பனின் குடி கெட்டுவிடவில்லை; தர்மகர்த்தாவின் மூளைதான் கெட்டு விட்டது! அந்தக் கிராமத்து மக்கள், கண்டால் விலகிச் செல்லும் உருவங்கள் இரண்டு இருக்கின்றன இப்போது.

ஒன்று, குழந்தையிழந்த தர்மகர்த்தாவின் பைத்தியக்கார உருவம்; மற்றது கோயில் காளை!

—சொர்ணம்

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

வி. கோவிந்தசாமி;
அம்பாசமுத்திரம்

(?) காமராசர் அமைச்சரவையில் மக்கள் மன்றத்தில் அதிக அறிமுகமில்லாதவர்கள் அமைச்சர்களாக இருப்பது ஏன்?

அறிமுகமில்லாதவர்கள் இருந்தால் தானே எஜமானனுக்கு அடங்கி நடப்பார்கள்! அதனால்தான்!

கே. எல். அரியநாயகம்;
அவிசாவேள்ள

(?) கக்கன் அமைச்சராகி விட்டாரே: அப்படியானால் அவர் வகித்து வந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு யார் வருவார்கள்?

பேரியார் அவர்களே மீண்டும் அந்தப்பதவிவகித்தாலும்; அதைக் காமராசர் அனுமதித்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, நண்பரே!

சின்னையன்; உறையூர்

(?) 'ஆட்சி பீடம்' என்பது என்ன?

தங்களுக்கு மட்டுமே உரிய 'பிதுரார்ஜித சொத்து' என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற; நல்லோர் அமரவேண்டிய பீடம்!

கா. வி. சோமநாதன்;
காரைக்குடி.

(?) சென்னை கேரளமாக மாறுமா?

மாறும்; இன்னும் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு! இப்போது கேரளத்தில் கம்யூனிஸ்ட்டுகள் பெற்றிருக்கும் இடம் அப்போது தமிழகத்தின் உண்மையான போதவுடைமைக் கட்சியாம் தி. மு. கழகத்திற்கு வரத்தான் போகிறது!

அபிசீனிய அடிமை ...

❋ 8-ம் பக்கத் தொடர்ச்சி

தில்லை; உன்னுடைய காதலி நான் என்பதை அறிந்தும், என்னை மனப்பூர்வமாக நம்பி அரசியாக நடிக்கவிட்டு விட்டுப் போன அவர்களுடைய பெருந்தன்மைக்கு, என்னுடைய கண்களை மட்டுமென்ன; உயிரையே அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறேன்!"

"உன் கண்களை இருட்டாக்கி. என் அறிவுக் கண்ணை ஒளிபெறச் செய்து விட்டாய் பமீ! என்னை நீ மன்னித்ததற்கு அடையாளமாக என்னை 'நிக்கா' செய்து கொள்ள உடனே சம்மதமளிக்க வேண்டும்!"-யாகூத் கழுவாய் வேண்டினான்.

"வேண்டாம் யாகூத்! கண்ணற்ற நான் மணமற்ற மலர்; பயனற்ற பாடம்!"

"கண்ணைப் பறித்தவனின் கரம் பிடிக்க அஞ்சுகிறாயா பமீ! உன் தியாகத் தீயில் என்னுடைய வஞ்சம் எரிந்து சாம்பலாகி விட்டது! அடிமை நிலையிலிருந்து என்னை ஓம்ராவாக்கிய அரசி ருசியாவையும், மிருகமாக இருந்த என்னை மனிதப் பண்புபெறச் செய்த உன்னையும் வாழ்க்கையின் இரு கண்களாகவே மதிக்கிறேன்...வா பமீ, அரசியைக் கண்டுபிடித்து அவர்கள் ஆசி பெற்றே நாம் கணவன் மனைவியாக வாழலாம்!"

இருவரும் எழுந்தனர். அரசியை அவர்கள் தேடிச் செல்லு முன்பே அரசியே அவர்களை நாடி வந்தாள்; உயிருடன் அல்ல; பிணமாக!

ஆம், அல்தூனியா இறந்ததைக் கேட்ட அரசி தற்கொலை புரிந்து கொண்டாள். ஆறுடையில் பிணமாகக் கிடந்த அவளை அடையாளம் கண்ட போர் வீரர்கள் யாகூத்திடம் தூக்கி வந்தனர்.

பிணத்தின்மீது புரண்டு அழுதாள் பமீ! உயிரற்ற அரசியை கண்ணிழந்ததால் காணும் நிலையிழந்ததை, பமீயா ஒரு ஆறுதலாகவே எண்ணினாள்.

அல்தூனியாவிற்கும் ருசியாவிற்கும் கல்லறை அமைந்தது! அபிசீனிய அடிமை விழியற்ற பெண்ணின் விவேகத்தால் வழிகாட்டப்பட்டு சென்றுகொண்டிருந்தான். (முற்றும்)

9-ம் தேதியே விற்பனைக்குக் கிடைக்கும்!
அற்புதமான திரை ஓவியம் — அழகான நூல் வடிவில்
: புதையல் :
திரைக்கதை வசனப் புத்தகம்!
விலை 8 அணா — கழிவு 40 சத வீதம்
எம். கே. பதிப்பகம்,
த. பெ. 712 — சென்னை—6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, பெவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு